# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 5 அக்டோபர் - டிசம்பர் 1999 இதழ் 4



கேரி ஸ்தாபித்த செராம்பூர் கல்லூரி




கேரி கல்கத்தாவில் நிறுவிய சபை

திருமறைத்தீபம்

Issue No. 4 of 1999

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப் படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப் பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ் விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

**கொள்கைகளையும், கோட்பாடு களையும் புறக்கணித்து, சத்திய த்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக் கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**


*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*(1834-1892)*

# ஆசிரியரிடமிருந்து!

திருமறைத்தீபம், இவ்விதழுடன் ஐந்தாவது ஆண்டை நிறைவு செய்கிறது. கடந்த ஐந்து வருடங்களில் தீபத்தின் மூலம் பல நாடுகளில் அநேக ஆத்துமாக்களைக் கர்த்தர் ஆசீர்வதித் துள்ளதை தொடர்ந்து வரும் கடிதங்களின் மூலம் அறிந்து கொள்கிறோம். கடிதமெழுதி தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதோடு, பத்திரிகைக்காக அன்றாடம் ஜெபிக்கிறோம் என்றும், தொடர்ந்து சத்தியத்தை மட்டும் எழுதுங்கள் என்று எம்மை ஊக்குவித்துவரும் நூற்றுக் கணக்கான அன்பு வாசகர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வருட ஆரம்பத்தில் பத்திரிகை செலவு அதிகரித்ததன் காரணமாக மேலைத்தேய நாடுகளிலும், மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு மட்டும் சந்தா அறிமுகப்படுத்த நேர்ந்தது. ஆனால், பத்திரிகையை எல்லோருக்கும் தொடர்ந்து அனுப்பி வந்துள்ளோம். கர்த்தர் இவ்வூழியம் தடையில்லாது தொடர வேண்டும் என்பதை எமக்கு உணர்த்தி சந்தா இல்லாம லேயே பத்திரிகையைத் தொடர்ந்து இலவசமாக அனுப்பும் வசதியை ஏற்படுத்தித் தந்துள்ளார். <u>ஆகவே, இனிப் பத்திரிகைக்கு சந்தா இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.</u> இருந்தபோதும், இப்பத்திரிகையின் மூலம் பயனடையும் அன்பர்கள் அனுப்பும் நன்கொடை கள் பலருக்கும் இதனை இலவசமாகத் தொடர்ந்து அனுப்பத் துணைபுரியும். ஆகவே, இவ்வூழியத்தில் பங்குகொள்ள ஆர்வமுள்ளவர்கள் உங்கள் நன்கொடை களை பத்திரிகையின் முகவரிக்கு அனுப்புங்கள்.

பத்திரிகை தொடர்ந்து தேவைப்படாது என்று கருதுபவர் கள் எமக்கு எழுதித்தெரிவித்தால் முகவரி லிஸ்டில் இருந்து உங்கள் முகவரியை அகற்றி விடுகிறோம். பத்திரிகை வேத அறிவைப்பெற்றுக்கொள்வதில் வாஞ்சையுள்ளவர்களைத் தொடர்ந்து அடைய வேண்டு மென்பதே எமது நோக்கம்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் இப்பத்திரிகை எந்நோக்கத்திற்காக உருவாகி, உழைக்க முன்வந்ததோ அந்நோக்கத்தை மனதில் கொண்டே வரப்போகும் 2000 வருடத்திலும் பத்திரிகை செயல்படும். நமது முன்னோர் கள் குருதி சிந்தி பாதுகாத்த வேதசத்தியங்களை வெளிப்படுத்தி, சீர்திருத்தவாதக் கிறிஸ்தவம் தமிழர் மத்தியில் பல்கிப் பெருக பத்திரிகை பயன்பட வேண்டு மென்பதே எமது 2000 ம் வருட இலட்சியம்.



*இன்று சிதைந்து, சீரழிந்து கொண்டிருக்கும் குடும்பத்தைப் பிடித்துள்ள சாபக்கேட்டிலிருந்து அதை விடுவிப்பதெப்படி? இதற்கான வேதபூர்வமான விளக்கத்தை இத்தொடர் அளிக்கிறது.*

# இல்லற வாழ்க்கையின் இரகசியம்

கர்த்தர் உருவாக்கிய குடும்பத்தைப் பற்றி நாம் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். கடந்த இதழில் கிறிஸ்தவ குடும்பத்தைப்பற்றியும், கிறிஸ்தவ திருமணத்தில் இருக்க வேண்டிய வேதபூர்வமான அம்சங்களைப்பற்றியும் பார்த்தோம்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் குடும்பவாழ்க்கையில் பல தவறுகள் ஏற்படுவதற்கான பிரதான காரணம் குடும்பத்தைப்பற்றியும், குடும்ப வாழ்க்கையைப் பற்றியும் அவர்கள் வேதபூர்வமான அறிவைக் கொண்டிராததுதான். இவ்விதழில் வேதம் கிறிஸ்துவை அடிப்படையாகக்கொண்டு அமையும் குடும்ப வாழ்க்கையின் முக்கிய அம்சங்களைத் தொடர்ந்து ஆராய்வோம்.

### குடும்பம் எதற்காக?

குடும்பத்தைத் தேவனே உருவாக்கினார் என்று கடந்து இதழில் பார்த்தோம். ஆனால் தேவன் அக்குடும்பத்தை ஏன் தோற்றுவித்தார்? ஆணையும், பெண்ணையும் உருவாக்கி உலகில் உலவ விடுவது மட்டும் அவருடைய நோக்கமாக இருக்கவில்லை. ஆணைப்படைத்த தேவன் அவன் தனக்கு ஒரு துணையைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதில் ஆர்வமாயிருந்தார். ஆதி மனிதன் தனக்கென ஒரு துணையைத் தேவன் சிருஷ்டித்திருந்த அனைத்திலும் இருந்து தேடிக்கொள்ள முடியவில்லை (ஆதி. 3:20). "தனியாயிருப்பது மனுஷனுக்கு நல்லதல்ல, அவனுக்குத் தகுந்த ஒரு துணையை உண்டாக்குவேன் என்று தேவன் சொல்லிக்கொண்டார்." (3:18). அவனால் தனக்கு ஒரு சரியான துணையைத் தேடிக்கொள்ள முடியாத நிலையில் தேவன் அவனுக்காக ஒரு துணையைத் தோற்றுவித்தார் என்று ஆதியாகமம் 3:18-22 வரையிலான வசனங்களில் வாசிக்கிறோம்.

இவ்வதிகாரத்தின் இவ்வசனங்கள் போதிக்கும் மூன்று முக்கியமான உண்மைகளை முதலில் நாம் கவனிக்க வேண்டும்.

(1) முதலாவதாக, மனிதன் திருமணமாகி இல்லற வாழ்க்கையில் ஈடுபட வேண்டும் என்பதே சிருஷ்டியில் தேவனுடைய எண்ணமாக இருந்தது (3:18). தனிமையில் இருப்பதற்காக மனிதனை தேவன் படைக்கவில்லை. அப்படி அவன் தனிமையில் இருப்பது தேவனைப் பொறுத்தவரையில் நல்லதல்ல. திருமண வாழ்க்கையில் ஈடுபடாமல் இருப்பது சிலருக்கு வரமாக இருக்கலாம் என்பதை நாம் 1 கொரி. 7 இன் போதனையின் மூலம் புரிந்து கொள்கிறோம். புனிதமான தேவகாரியங்களுக்காக சிலருக்கு தேவன் அத்தகைய வரத்தை அளிக்கலாம். பவுல் இதற்கு ஒரு உதாரணம். பவுல் திருமணம் செய்யவில்லை என்று நாம் கூறமுடியாது. ஆனால், பவுலின் மிஷனரிப்பணிக் காலங்களில் பவுல் திருமண வாழ்வில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதை அறிந்து கொள்கிறோம். அவருடைய மனைவிக்கு என்ன நேர்ந்தது என்ற கவலை நமக்குத் தேவையில்லாதது. அவர் இறந்திருக்கலாம். அப்படி இறந்திருந்தால் பவுல் மறுமணம் செய்துகொள்ளவில்லை என்பதும் நமக்குத் தெரிகிறது. இதைப்பற்றிப் பேசும் பவுல், அத்தகைய வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு தனக்கும் மற்றவர்களைப்போல உரிமை இருக்கிறது என்று கூறுகிறார். இருந்த போதும் மேலான நோக்கங்களுக்காக அத்தகைய வாழ்க்கையில் பவுல் ஈடுபடவில்லை என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், 1 கொரி. 7 இல் பவுல் திருமணம் ஏன் அவசியம் என்பதற்கு இன்னுமொரு காரணத்தையும் தருகிறார். மனிதர்கள் தங்களுடைய பாலுணர்வுகளைக் கட்டுப்படுத்தி திருமணவாழ்வில் புனிதமாகவும், முறையாகவும் பாலுறவில் ஈடுபட்டு இன்பம் காணவேண்டும் என்பதற்காகவும் திருமணம் அவசியமாக இருப்பதாக பவுல் கூறுகிறார் (7:1). திருமணவாழ்விற்கு வெளியில் ஒருவரும் பாலுறவில் ஈடுபட வேதம் அனுமதிக்கவில்லை. ஆணும், பெண்ணும் கட்டுப்பாட்டுடனும், அதேவேளை அனைத்து சுதந்திரத்துடனும் திருமணவாழ்வில் மட்டுமே பாலுறவில் ஈடுபடலாம் (மத்தேயு 19:4, 5). ஆகவே, தனிமை இத்தகைய புனிதநோக்கங்களுக்கு தடையாக இருப்பது மட்டுமன்றி, மனிதர்கள் பாவத்துடன் விளையாடும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திவிடும். மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல என்று இப்பகுதியில் தேவன் கூறியிருப்பதை நினைவுகூற வேண்டும்

ஆகவே, சாதாரணமாக ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தங்களுக்கு ஒரு துணையைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பதே படைத்தவரின் நோக்கமாக இருந்தது. திருமணம் படைப்பின் திட்டங்களில் ஒன்று (Creation Ordinance). ஆணும், பெண்ணும் தனிமையில் இருக்க முயற்சிப்பது தேவனின் படைப்பின் நோக்கங்களுக்கு விரோதமானது. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் திருமண வயதும், தகுதியும் வந்தபின் தங்களுக்கான ஒரு துணையைத் தேடிக்கொண்டு திருமண வாழ்வில் ஈடுபட வேண்டியது அவசியம். ஆகவே கிறிஸ்தவ வாலிபர்களும், பெண்களும் வளரும்போதே திருமணத்தைப் பற்றிய புனிதமான, வேதபூர்வமான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வெண்ணங்களை அவர்களுக்குப் போதிப்பது பெற்றோர்களினதும், போதகர்களினதும் கடமை.

அதேவேளை, இவ்வுண்மையில் இருந்து இன்னுமொரு பாடத்தையும் படிக்கிறோம். திருமணமான கணவனும், மனைவியும் அநாவசியமாக தனிமையை நாடிப்போவதோ அல்லது தனிமையில் இருக்கும் முயற்சியில் ஈடுபடுவதோ தவறு. கணவனும், மனைவியும் இணைந் திருப்பதற்காகவே திருமணத்தைக் கர்த்தர் உருவாக்கினார். இருவராக இருந்தபோதும் ஒருயிராகவும், ஒருடலாகவும் திருமணத்தில் இணைந்தபின் அவர்கள் தனிமையை நாடுவது திருமண வாழ்விற்கு குழிபறிக்கும் முயற்சியாகவே அமையும் (மத்தேயு 19:6). பவுல் இதைப்பற்றி 1 கொரி. 7:5 இல் விளக்கும்போது, ஆன்மீக காரணங்களுக்காக மட்டும் சில காலம் பிரிந்திருப்பதற்கு தம்பதிகளுக்கு அனுமதியளிக்கிறார். இதையும் அவர்கள் ஒருமனப்பட்டே செய்ய வேண்டும். இக்காலத்தை அவர்கள் தேவையற்றவிதத்தில் நீடிக்கவும் கூடாது. "ஜெபத்திற்கு வசதியாக இருக்கும்படி சிலகாலம் மாத்திரம் பிரிந்திருப்பதற்கு இருவரும் சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டொருவர் பிரிய வேண்டாம்" என்கிறார் பவுல். அத்தோடு, "இச்சையடக்கம் உங்களுக்கு இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடி மறுபடியும் கூடிவாழுங்கள்" என்றும் பவுல் அறிவுரையளிக்கிறார். இதற்குப் பொருளென்னவெனில், பாலுணர்வை முறையானவிதத்தில் கட்டுப்படுத்தி திருமண வாழ்க்கையை வேதபூர்வமாக வாழ வேண்டுமானால் தேவையற்றவிதத்தில் தனிமையை நாடுவதை தம்பதிகள் கைவிட வேண்டும் என்பது பொருள். தேவையற்றவிதத்தில் தனிமையில் நேரத்தை செலவிடும் கணவனும், மனைவியும் சாத்தானின் தூண்டுதலுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று வேதம் எச்சரிக்கிறது.

**திருமணமான கணவனும், மனைவியும் அநாவசியமாக தனிமையை நாடிப்போவதோ அல்லது தனிமையில் இருக்கும் முயற்சியில் ஈடுபடுவதோ தவறு.**

மனைவியை ஊரில்விட்டுவிட்டு வயிற்றுப் பிழைப்பிற்காக வெளிநாடுகளுக்குப்போய் உழைக்கும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய செயலைக்குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருமணம் செய்தபின் அத்திருமணவாழ்க்கையை வேதபூர்வமாக கர்த்தரின் மகிமைக்காக வாழாமல் உலகப்பிரகாரமான காரணங்களுக்காக மனைவியை விட்டுவிட்டு கணவனும், கணவனைவிட்டுவிட்டு மனைவியும் பிரிந்து வாழ்வது ஆபத்தை விலைக்கு வாங்கும் செயல். கணவன் மனைவியின் தேவைகளையும், மனைவி கணவனின் தேவைகளையும் திருமண வாழ்க்கையில் நிறை வேற்ற தனிமையும், பிரிவும் தடையாக அமையும். இன்று பல வருடங்களுக்கு மனைவியையும், குழந்தைகளையும்விட்டுப் பிரிந்து எந்தவிதக் குற்றவுணர்வும் இல்லாமல் வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வேலை செய்யும் கிறிஸ்தவர்களைப் பார்க்கிறோம். இச்செயல் கிறிஸ்தவத்திற்கும், திருமண வாழ்க்கைக்கும் முரணானது.

அதுமட்டுமல்லாமல், மனைவியோடும் பிள்ளைகளோடும் நேரத்தை செலவிடாமல் தேவையற்ற விதத்தில் தனிமையில் வேறு பெண்களுடன் அதிக நேரத்தை செலவிட்டு சாத்தானின் தூண்டுதலுக்குப் பலியான ஊழியக்காரர்களைப் பற்றியும் நாம் அடிக்கடி கேள்விப் படுகிறோம். ஆகவேதான் ஊழியக் காரர்கள் தங்கள் திருமண வாழ்க்கையில் மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஊழியம், ஊழியம் என்று ஊருக்கு ஊழியம் செய்து விட்டு உங்களுக்காக தேவன் கொடுத்த மனைவியின் தேவைகளை நிறைவேற்றா விட்டால் அவ்வூழியத்தால் எந்தப் பயனும் இல்லை. ஊழியக்காரர்கள் முக்கியமாக தங்கள் ஊழியம் குடும்பத்தைப் பாதித்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பையும் கொண்டுள்ளார்கள். அத்தோடு கணவன்மார் வீட்டில் டெலிவிஷன் முன்னால் காலத்தை செலவிடுவதும், வீட்டிற்கு நேரத்திற்குப் போகாமல் ஆபிஸில் காலத்தைக் கழிப்பதும் குடும்ப வாழ்விற்கு ஆபத்தை விளைவிக்கும் செயல்கள்.

(2) இரண்டாவதாக இப்பகுதி, திருமணம் ஓர் ஆணையும், பெண்ணையும் ஒருயிராகவும், ஒருடலாகவும் இணைக்கிறது என்ற உண்மையைப் போதிக்கிறது. ஏற்கனவே மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்ற கர்த்தரின் வார்த்தைகளைக் கவனித்தோம். இப்போது திருமணம் ஆணும், பெண்ணுமாகிய இருவரை எந்தளவுக்கு இணைக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதி. 3:24 இல் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு (விலகி) தன் மனைவியோடு இசைந்திருப்பான் என்றுகூறுவதைப் பார்க்கிறோம். இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள "விட்டு", "இசைந்து" ஆகிய வார்த்தைகள் மிக முக்கியமானவை. ஏனெனில், இவ்வார்த்தைகள் ஒருவன் தன் மனைவியோடு முறையான குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு தனது பெற்றோரை விட்டுப்பிரிந்து முதலில் தனிக்குடித்தனம் நடத்த வேண்டியது அவசியம் என்று சுட்டிக்

காட்டுகின்றன. திருமணமானவன் தன் மனைவியோடு இசைந்து வாழ தனது பெற்றோரைவிட்டுப் பிரிந்து தனியாக ஒரு குடும்பத்தை உருவாக்க வேண்டும். வேதம் போதிக்கும் இவ்வுண்மையை அநேகர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தி தமது தேவைகளையும், கடமைகளையும் வேதபூர்வமாக நிறைவேற்றிக்கொள்ள இவ்வாறு பிறரின் தலையீடின்றி ஒரு குடும்பம் வாழ வேண்டிய தவசியம். மனித உறவுகளில் பலவற்றை நாம் பார்க்கிறோம். பெற்றோர்களுக்கு பிள்ளைகளிடம் இருக்கும் உறவு, நண்பர்களுக்கிடையில் இருக்கும் உறவு ஆகிய உறவுகளையெல்லாம்விட மேலான, விசேடமான உறவு கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் உள்ள உறவு. வேதம், திருமணம் ஒரு ஆணையும், பெண்ணையும் ஒரே மாம்சமாக இணைக்கிறது (ஆதி. 3:24-25) என்று போதிக்கிறது. இத்தகைய இணைப்பிற்கு எதுவும் தடையாக இருந்து விடக்கூடாது.

ஓர் ஆணையும், பெண்ணையும் இணைத்து திருமணம் ஏற்படுத்தும் இத்தகைய இணைப்பை பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் தாலியோ அல்லது கைவிரலில் மாட்டப்படும் மோதிரமோ ஏற்படுத்துவதில்லை. அவை இவ்விணைப்பிற்கான வெறும் அடையாளங்கள் மட்டுமே. இவ்விணைப்பைக் கணவன், மனைவி இருவரது உள்ளத்திலும், அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பே ஏற்படுத்துகின்றது. அத்தகைய அன்பை அவர்கள் இருவரும் ஒருவர் மேல் மற்றவர் தடையில்லாது காட்டி, வளர்த்து வளரவேண்டுமென்பதற்காகத்தான், அவர்கள் தங்களுடைய பெற்றோர்களை விட்டுப்பிரிந்து வாழ வேண்டுமென்று வேதம் போதிக்கிறது (ஆதி. 3:24; மத். 19:5). கணவன், மனைவி உறவுக்கு இடையில் வேறு எந்த உறவும் புகுந்து குழப்பிவிடக் கூடாது என்பதை வேதம் இதன் மூலம் வலியுறுத்துகிறது. பெற்றோர்கள் இதுவரை கொண்டிருந்த அதிகாரத்தை இனி இக்குடும்பத்தின் மேல் காட்டக்கூடாது. திருமணத்தின் மூலம் ஒரு ஆணும், ஒரு பெண்ணும், கணவன் மனைவியாக இணைந்து ஒரு குடும்பத்தை அமைக்கும்போது அக்குடும்பத்தின் மீது வேறு எவரும் அதிகாரம் செலுத்த முடியாது. அதுமட்டுமல்லாமல், பெற்றோரைவிட்டுப் பிரிந்து ஒரு குடும்பத்தை அமைப்பவர்கள் ஒரு புதிய உறவில் தம்பதிகளாக அன்போடு இணைந்து வாழ வேண்டியிருப்பதையும் இது உணர்த்துகிறது. ஆகவே, பெற்றோர்கள் மேல் இருக்கும் அன்பிற்கெல்லாம் மேலான அன்பை ஒரு கணவன், மனைவிமீதும், மனைவி கணவன் மீதும் காட்ட வேண்டியதையும் இவ்வசனம் உணர்த்துகிறது. இதற்காக அவர்கள் தங்கள் பெற்றோர்கள் மீது இனி அன்பு வைக்கக் கூடாதென்றோ, அவர்களை நிராகரிக்கவேண்டுமென்றோ கூறவரவில்லை. ஆனால், கணவன், மனைவி இருவரும் தாங்கள் இணைந்து வாழும் வாழ்க்கைக்கு குறுக்கே எவரும் வந்துவிடக்கூடாது.

இன்று பல குடும்பங்களில் பிரச்சனைகள் ஏற்படுவதற்குக் காரணம் மற்றவர்களின் தலையீடுதான். பெற்றோர் மட்டுமல்லாமல், உறவினர்களும்கூட தலையிடும் நிலை காணப்படுகின்றது. பெற்றோர்களிடமும், உறவினர்களிடமும் நாம் அன்பும் மதிப்பும் கொண்டிருக்க வேண்டியதவசியம் என்றாலும் நமது குடும்பத்தில் தலையிடுவதை தேவன் அனுமதிக்கவில்லை. இவ்விடயத்தில் கிறிஸ்தவர்கள், கலாச்சார பாரம்பரியங்களை உதரித்தள்ளிவிட்டு வேதத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். சில வேளைகளில் பொருளாதார நிலைமை தனியாக வாழ்வதற்கு இடம் கொடுக்காமல் போகலாம். ஆனால், திருமணம் செய்து கொள்ளப்போகும் கிறிஸ்தவர்கள் இவற்றை ஆரம்பத்திலேயே சிந்தித்துப் பார்த்து அதற்கான ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும். குடிசையில் வாழ்ந்தாலும் தனியாக வாழ்வதே குடும்பத்தின் எதிர்காலத்திற்கு நல்லது. இது கணவன், மனைவியின் நல்லுறவிற்கு மட்டுமல்லாமல், பிள்ளைகளை வேதபூர்வமாக வளர்ப்பதற்கும் அவசியமானது.

**திருமணமானவன் தன் மனைவியோடு இசைந்து வாழ தனது பெற்றோரைவிட்டுப் பிரிந்து தனியாக ஒரு குடும்பத்தை உருவாக்க வேண்டும்.**

இதுபெற்றோர்கள் சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை. தங்களுடைய பிள்ளைகள்மேல் உள்ள பாசத்தால் பல பெற்றோர்கள், பிள்ளைகளுக்கு திருமணமானபிறகும் அவர்களுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவர்களுக்காக தீர்மானம் எடுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். பெற்றோர்கள் தங்களுடைய அதிகாரம் பிள்ளைகளின் திருமணத்தோடு முடிந்துவிட்டதென்பதை உணர வேண்டும். பிள்ளைகளுக்கு பெற்றோர் தொடர்பான சில பொறுப்புகள் தொடர்ந்திருந்த போதும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அதிகாரம் செலுத்தி அவர்களுடைய வாழ்க்கைக்குரிய தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு முடிவுக்கு வந்துவிட்டது. இதேபோல் திருமணமானவர்கள் தொடர்ந்தும் தங்கள் பெற்றோர்களில் தங்கியிருந்து தங்கள் திருமண வாழ்க்கையை குழைத்துக் கொள்ளக் கூடாது.

இவ்விரண்டாவது உண்மை போதிக்கும் இன்னுமொரு பாடத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது புருஷன் தன் மனைவியோடு இசைந்திருப்பான் என்ற ஆதியாகம வார்த்தைகள் கணவனுக்கும், மனைவிக்கும் இடையில் இருக்க வேண்டிய தூய்மையான பாலுறவுத் தொடர்பையும் சுட்டிக்காட்டுகிறது. இதைக் குறித்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஒரு ஆணையும், பெண்ணையும் திருமணத்தில் பிணைத்து வைப்பது பாலுறவே. பாலுறவே திருமணமாகிவிடாது. ஆனால், திருமணம் மட்டுமே ஆணுக்கும், பெண்ணுக்குமிடையில் அமைய வேண்டிய பாலுறவுக்கு அனுமதியளிக்கிறது. ஆகவே, கணவனும், மனைவியும் இவ்வுறவு தொடர்ந்திருக்கவும், இவ்வுறவில் ஒருவருக்கொருவர் எந்தவிதத்திலும் தடையாக இருந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். நம்நாட்டு மக்களிடத்தில் கலாச்சாரத்தின் காரணமாக பாலுறவை, ஏதோ பேசக்கூடாத தொன்றாகக் கருதும் வழக்கம் உண்டு. இதைக் கிறிஸ்தவர்களிடத்திலும் காணலாம். இத்தகைய எண்ணங்களால் கணவனும், மனைவியும்

அதைக் குறித்த வேதபூர்வமான அறிவில்லாமல் ஒருவரையொருவர் திருப்தி செய்யாமல் போய் விடலாம். ஆனால், வேதம் திருமணத்தில் மட்டுமே பாலுறவுக்கு இடமுண்டு என்று மட்டும் கூறாமல், திருமணத்தில் சகல சுதந்திரத்துடனும், கணவனும், மனைவியும் அதில் இன்பம் காண வேண்டும் என்றும் போதிக்கின்றது. இதில் தவறிழைக்கும் கணவனும், மனைவியும் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படு வதைத் தவிர்க்க முடியாது (1 கொரி. 7:1-4). கணவனுடைய சரீரம் கணவனுக்கு சொந்தமில்லை. அதே மனைவியின் சரீரம், மனைவிக்கு சொந்தமில்லை என்று கூறுவதன் மூலம் பவுல், கணவனும், மனைவியும் எவ்வாறு ஒருவரையொருவர் அனுசரித்து, இசைந்து நடந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கிறார். அதாவது, மனைவியின் தேவைகளை அறிந்து கணவனும், கணவனின் தேவைகளை அறிந்து மனைவியும் நடந்து கொள்ள வேண்டும். இன்று அநேக கிறிஸ்தவர்களுக்கு இவ்வுறவு பற்றிய வேதபூர்வமான அறிவில்லாமலிருக்கிறது. இதனால், வெளியில் சொல்லமுடியாமல் வாழ்க்கையில் பிரச்சனைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிற கிறிஸ்தவ குடும்பங்களும் அநேகம்.

(3) இவ்வாதியாகம வேதப்பகுதி போதிக்கும் மூன்றாவது உண்மை, திருமணம் நிரந்தரமானது என்பதுதான். அவர்கள் ஒரேமாம்சமாயிருப்பார்கள் (ஆதி 2:24, 25) என்று ஆதியாகமத்தில் வாசிக்கிறோம். திருமணவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், அதில் பிரிவுக்கு இடமில்லை என்பதை உணர வேண்டும். தேவன் திருமணத்தை ஏற்படுத்தியபோது அதில் பிரிவேற்படுவதையோ அல்லது விவாகரத்தையோ தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. கணவனும், மனைவியும் கூடி மகிழ்ச்சியோடு வாழ்வதையே அவர் விரும்புகிறார். ஆகவே, திருமணமானவர்கள் வாழ்க்கையை குழப்பிக் கொள்ளாமல், அமைதியான நீரோட்டத்தைப்போல் தொடர்ந்தோடி கர்த்தருக்கு மகிமை சேர்க்கும்படி வாழவேண்டும். விவாகரத்தையோ, பிரிந்து வாழ்வதையோ அவர்கள் கனவிலும் எண்ணிப் பார்க்கக்கூடாது.


ஒரே கூரைக்குக்கீழே, திருமணபந்தத்தை ஏற்படுத்திக் கொண்டும் வீட்டில் பிரிந்து வாழ்க்கிறவர்கள் இருக்கிறார்கள். இது உண்மையான திருமண வாழ்க்கையல்ல. ஒரு முறை தன் மனைவியோடு பிரச்சனை என்று கூறி என்னை அணுகி ஆலோசனை கேட்க வந்த ஒருவர், தான் தன் மனைவியோடு ஒரே அறையில் முப்பது வருடங்களாக உறங்கியதில்லை என்று கூறினார். இதற்குக் காரணம், மனைவிக்கு அவர் குறட்டை விடுவது பிடிக்கவில்லை. ஆனால், இக்குடும்பத்தில் ஒற்றுமை இல்லை. கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் அனுசரித்துப்போகும் பக்குவம் இல்லை. அத்தோடு அவர்கள் சுயநலநோக்கால் பிரச்சனை ஏற்படுவதற்கான செயல்களையே செய்து வந்தார்கள். ஒரே மாம்சமாக இருக்க வேண்டியவர்கள் ஒரே அறையில் உறங்குவதையும் நிறுத்திக் கொண்டார்கள். இது தேவன் போதிக்கும் திருமணபந்தமில்லை. ஆகவே, வெறுமனே தாலிகட்டி நடக்கும் திருமணத்தையெல்லாம் திருமண வாழ்க்கை என்று கூறிவிட முடியாது. திருமணத்திற்கான இலக்கணங்களைக் கொண்டமைந்த குடும்ப வாழ்க்கையே வேதபூர்வமான வாழ்க்கை. ஒருவீட்டில் குடியிருந்தால் மட்டும் போதாது. ஒரே உடலாகவும், ஒரே உயிராகவும் கணவனும், மனைவியும் வாழ வேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்பட்டு கணவனும், மனைவியும் பிரிந்து போக வேண்டிய நிலை ஏற்படுவதற்கும், அல்லது கணவனோ, மனைவியோ தவறான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நாம் மேலே இதுவரை பார்த்த காரியங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் இல்லாமல் இருப்பதே காரணம். எனவேதான் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள், திருமணத்திற்கு முன் திருமணத்தைப்பற்றிய வேதபூர்வமான எண்ணங்களை தங்களுடைய சிந்தையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், தாம் திருமணம் செய்து கொள்ளப்போகிறவர் தனக்குப் பிடித்தவரா? தனக்குத்தகுதியானவர்தானா? ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து வளர்ந்து வருகின்றவரா? என்பதையெல்லாம் அறிந்து கொண்டு திருமணவாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்று நமது பெரியோர்கள் கூறுவார்கள். அதாவது, இது ஆயிரங்காலத்திற்கும் நின்று நிலைக்க வேண்டிய ஒரு உறவு. அத்தகைய உறவை கடைக்குப் போய் பணம் கொடுத்து வாங்கி அனுபவிக்கக்கூடிய ஒரு பொருளைப்போல எண்ணிவிடக்கூடாது. இல்லற வாழ்வின் இரகசியத்தை அறிந்து இல்லறம் நல்லறமாக நடக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(வளரும்)

*"நான் பரலோகத்திற்குப் போக நேர்ந்து, அங்கே என்னால் கிறிஸ்துவைக் காண முடியாவிட்டால் நான் உடனடி யாகப் பரலோகத்தைவிட்டு வந்துவிடுவேன். கிறிஸ்து இல்லாத பரலோகம் எனக்கு நரகமே."*

– தொமஸ் குட்வின் –



**குடும்ப ஆராதனை என்பது இன்று அநேகருக்கு மறந்துபோன ஒரு வழக்கமாக இருக்கலாம். கிறிஸ்தவ குடும்பங்கள் கிறிஸ்துவில் வளர இன்று அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுவது குடும்ப ஆராதனையே.**

# குடும்ப ஆராதனை

குடும்ப ஆராதனையைப்பற்றி பியூரிட்டன் பிதாகளில் ஒருவரான நெத்தானியல் வின்ஸன்ட் (Nathanael Vincent) பின்வருமாறு கூறுகிறார். "குடும்பங்களே ஒவ்வொரு நாட்டினதும், சபைகளினதும் இறையியல் கல்லூரி களாக உள்ளன. ஆகவே, நீங்கள் உங்கள் நாடும், சபைகளும் சிறக்க வேண்டும் என்று விரும்பினால் உங்கள் குடும்பத்தில் கவனம் செலுத்தி அங்கே இறைவாழ்க்கை சிறப்பாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சீர்திருத்தம் முதலில் தனிமனி தர்களில் ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனி தனும் சீர்திருந்துவானெனில், எல்லோரிலும் சீர்திருத்தத்தைப் பார்க்கலாம். அதேநேரம், சீர்திருத் தம் தனி மனிதனில் இருந்து குடும்பங்களுக்குப் பரவ வேண்டும். குடும்பங்கள் சீர்திருந்த ஆரம்பித்தால் நாடு எத்தனை நல்ல நாடாக இருக்கும்." இவ்வாறு குடும்பங்களும், சபைகளும், நாடும் சிறக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் குடும்ப வழிபாட்டில் நமது முன்னோர்கள் அதிக கவனம் செலுத்தினர். இதனால்தான் சீர்திருத்தவாத காலத்திலும், பியூரிட்டன்களின் காலத்திலும், அதற்குப் பின்பும் வளர்ந்து, வாழ்ந்திருந்த கிறிஸ்தவத்தில் நாம் குடும்ப வழிபாட்டின் சிறப்பைப் பார்க்க முடிகின்றது.

கடந்த இதழில் குடும்ப ஆராதனை என்றால் என்ன? கிறிஸ்தவம் தலைசிறந்து காணப்பட்ட காலங்களிலெல்லாம் அது எவ்வாறு சிறப்பாக கிறிஸ் தவ குடும்பங்களில் கடைப்பிடிக்கப்பட்டது என்று பார்த்தோம். ஆனால், அதை நமது குடும்பங்களில் எவ்வாறு நடத்துவது என்பதை அறிந்து கொள்ளு முன் அது ஏன் அவசியம் என்று ஆணித்தரமாக வேதம் போதிக்கும் நான்கு முக்கிய காரணங்களை இவ்விதழில் பார்ப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும் எந்தவொரு காரியத்திற்கும் வேதபூர்வமான ஆதாரங்கள் நமக்கு அவசியம். ஒரு காரியத்தை செய்ய முற்படும்போது அது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது என்பதற்காகவும், நடைமுறைக்கு பலனளிக்கும் என்பதற்காகவும் மட்டும் செய்ய முற்படக்கூடாது. வேதம் அதன் அவசியத்தைப்பற்றி எந்தளவுக்குப் போதிக்கின்றது என்பதைப்புரிந்து கொண்டு, அதனால் வழிநடத்தப்பட்டே எக்காரி யத்தையும் செய்ய வேண்டும். ஆகவே, ஜெரி மார் சலினோ (Jerry Marcellino) என்ற போதகர் குடும்ப ஆராதனை பற்றி எழுதிய சிறு நூலில், குடும்ப ஆராதனையை நாம் கடைப்பிடிப்பது ஏன் அவசியம் என்பதை விளக்கிக்காட்டும் நான்கு வேதபூர்வமான காரணங்களை இப்போது பார்ப்போம்.

### 1. நாம் தேவன் நமக்குத்தந்துள்ள ஈவுகளைப் பராமரிக்கும் பொறுப்புடையவர்களாக உள்ளோம்.

சங்கீதக்காரன், தேவன் குழந்தைகளை நமக்கு ஈவாகக்கொடுத்துள்ளார் என்று கூறுகிறான் (சங். 127:3). இதனாலேயே எசேக்கியலின் காலத்தில் யெரூசெலேமி ன் மக்கள் தங்கள் குழந்தைகளைப் பலிகொடுக்கும் செயலை அவர் வன்மையாகக் கண்டித்தார் (ஏசா. 16:20-21). இவ்வாறு பலிகொடுத்ததன் மூலம் அம்மக்கள் தேவனுடைய விலைமதிப்பில்லாத குழந்தைச் செல்வங் களை அழித்தனர். நமது குழந்தைகள் தேவனுக்குச் சொந்தமானவை என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. (இதனால்தான் கருத்தடை செய்து கொள்வது தேவன் கொடுத்துள்ள குழந்தைச் செல்வத்தை அழிக்கும் கொலைச் செயலாகும்.) பெற்றோர்களாகிய நாம் தேவனின் ஈவாகிய குழந்தை களைப் பாதுகாத்து வளர்க்கும் பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளோம். நமது கரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குழந்தைகளைக்குறித்து நாம் தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஆகவே, நமது முழு வல்லமையையும் பயன்படுத்தி நம் குழந்தைகளை கர்த்தரின் வழியில் வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு நமது கரத்தில் இருக்கிறது. கிறிஸ்துவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பெருங் கடமை நம்முடையது. சங்கீதக்காரன் 78:1-8 இல் இக்கடமையைக்குறித்து வலியுறுத்திக் கூறுகிறான். கர்த்தரின் வழிகளை நாம் நமது குழந்தைகளுக்குப் போதித்து வரப்போகும் சந்ததியும் அவருடைய வழிகளின்படி நடக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பொறுப்பு நம்முடையது. நாம் நமக்காக மட்டும் இவ்வுலகில் வாழக்கூடாது (ரோமர் 14:7-9). நமது சந்ததிக்காகவும் வாழும்படியாகத் தோற்றுவிக்கப்பட் டுள்ளோம்.

### 2. தேவனின் இறை ஆண்மையின்படி நமது குழந்தைகள் நமக்குக்கொடுக்கப்பட்டுள்ளார்கள்.

நாம் விசுவாசிகளாக இருப்பது சந்தர்ப்பவசத்தால் நிகழந்ததொன்றல்ல என்பது நமக்குத்தெரியும். அதே போல் நமது பிள்ளைகளும் சந்தர்ப்பவசத்தால் நமது குடும்பங்களில் பிறக்கவில்லை. தேவனை அறியாத மக்கள் இவ்வாறே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தேவன் தனது ஞானத்தாலும், இறை ஆண்மையாலும் விசுவாசிகளான நமது கரத்தில் குழந்தைகளை ஒரு பெரும் நோக்கத்திற்காக ஒப்படைத்து அவர்களை ஆசீர்வதித்துள்ளார். ஒருவர் மட்டுமே விசுவாசியாக இருக்கும் குடும்பத்தில்

இருக்கும் குழந்தைகளும் இவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர் (1 கொரி. 7:12-14). இதனால் விசுவாசிகளின் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் மாயாஜால வித்தைபோல் தேவனை அறிந்து கொள்வார்கள் என்று நாம் தவறாக எண்ணிவிடக்கூடாது. பெற்றோர்களின் விசுவாசமோ, அல்லது குடும்ப உறவோ எந்தவொரு குழந்தைக்கும் இரட்சிப்பைக் கொடுக்க முடியாது. இவ்வாறு நினைப்பவர்கள் வேதம் தெரியாதவர்கள். கிரியைகளும், குடும்ப உறவுகளும் எவருக்கும் இரட்சிப்பைத் தர முடியாது. ஆனால், விசுவாசிகள் விசுவாச வாழ்க்கை வாழும் போது அத்தகைய குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கேட்டு அவர் வழியில் செல்லக்கூடிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையே 1 கொரி 7 :12-14 வசனங்கள் தெரிவிக்கின்றன. தேவனுடைய ஞானத்தாலும், வல்லமையாலும் விசுவாச வாழ்க்கை வாழ்பவர்களின் குடும்பங்களின் பிறக்கும் பிள்ளைகள் கர்த்தரின் வழிகளை அறிந்து கொள்ளும் பாக்கியம் இருப்பதால், விசுவாசிகளான பெற்றோர்கள் அப்பிள்ளைகள் தேவனை அறிந்து கொள்ளக் கூடிய பெரும் வாய்ப்பு இருக்கிறது என்பதை நிச்சயமாக நம்பலாம் (யோவான் 5:43; 2 பேதுரு 3:15).

கிரேக்க தகப்பனைக் கொண்டிருந்த தீமோத்தேயு (அப். 16) விசுவாசியான தனது தாயிடம் இருந்தும், பாட்டியிடமிருந்தும் கர்த்தரைப்பற்றி அறிந்து அவரை விசுவாசித்து அவர் வழியில் நடந்ததை வேதம் போதிக்கின்றது. ஆகவே, விசுவாசிக்கும் மக்களுக்கு தேவன் தனது ஞானத்தின் மூலம் ஒரு பெருநோக்கத்திற்காக பிள்ளைகளைத் தந்துள்ளதை நாம் புரிந்து கொள்வதோடு நின்றுவிடாது, நம்மால் முடிந்ததை தேவபயத்தோடு செய்து அப்பிள்ளைகள் தேவவழியில் நடக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

## 3. குடும்ப ஆராதனை சபையின் பொது ஆராதனைக்கு நம்மைத் தயார் செய்கிறது.

குடும்ப ஆராதனை செய்வது மட்டும் ஆராதனையாகிவிடாது. குடும்ப ஆராதனை ஆராதனையின் மூன்றுவிதங்களில் ஒன்றாகும். ஏனையவை, தனி வழிபாடும், பொதுவழிபாடுமாகும். நாம் நமது வாழ்க்கையில் தனி ஆராதனையையும், குடும்ப ஆராதனையையும் முறைப்படி நடத்தினால் மட்டுமே நம்மைச் சரிவர சபையின் பொதுவழிபாட்டிற்கு தயார்செய்துகொள்ள முடியும். இன்று அநேகர் சபையில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். இது வேதத்திற்குப் புறம்பான வாழ்க்கை. சபையில்லாமல் வாழ்கிறவர்கள் கிறிஸ்த வாழ்க்கையில் வளர முடியாது, கிறிஸ்துவை மகிமைப்படுத்த முடியாது. ஆனால், சபைக்குத் தம்மை ஒப்புக் கொடுத்துள்ளவர்கள் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சிறப்பாக தனிஜெபம், குடும்ப ஆராதனை ஆகியவற்றை விசுவாசத்தோடு நடத்தி வருவார்களே யானால் அவர்கள் சபை ஆராதனையின் மூலம் பெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.

முதலில் நாம் நமது பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். நமது விசுவாசம் வெறும் பேச்சாக இருந்துவிடக்கூடாது. நமது பிள்ளைகள் நமது விசுவாசத்தை நம் வாழ்க்கையில் பார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். வீட்டில் அன்போடு பேசி, கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் பேச்சுக்களைப் பேசி, கிறிஸ்துவைப்பற்றி அனைவரும் சிந்திக்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும். இத்தகைய சூழலில் வாழும் நமது வீட்டார் நிச்சயம் ஞாயிறு தினம் ஆராதனைக்கு தவறாமல் வருவார்கள். வீட்டில் ஆறு நாட்கள் கிறிஸ்துவைக்குறித்துப் பேசி, ஆராதித்து வளர்பவர்களுக்கு வாரத்தின் முதல் தினம் சபை ஆராதனைக்குப் போவது கடினமானதாக இருக்காது. ஆறு நாட்கள் கர்த்தரை ஆராதித்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் சபையோடு கர்த்தரை ஆராதிக்க எதிர்பார்ப்போடு சபைக்கு வருவார்கள். ஏனெனில், ஆராதனையை அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கருதாமல் அதுவே வாழ்க்கை என்று நம்புகிறார்கள்.

## 4. நமது நாட்டின் ஆவிக்குரிய நிலைக்கு குடும்பங்களின் நிலையும் ஒரு முக்கிய காரணம்.

வீடு எப்படி இருக்கிறதோ, அதுபோலவே சபையும், நாடும் இருக்கும் என்று ஒருவர் எப்போதோ கூறியுள்ளார். இதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. அதேவேளை குடும்ப ஆராதனையை ஏற்படுத்தி விடுவதால் மட்டும் நாட்டின் ஆவிக்குரிய நிலை மாறிவிடும் என்று நான் கூறவில்லை. நான் வாழும் நியூசிலாந்திற்கு அருகில் சமோவா, பீஜீ போன்ற நாடுகள் உள்ளன. இந்நாடுகளுக்குப் போன மிஷனரிகள் குடும்ப ஆராதனையைப்பற்றிப்போதித்து வீடு தோறும் அதனை ஏற்படுத்தி வைத்தனர். முக்கியமாக சமோவாவில் நாடு முழுவதும் மாலை நேரம் குடும்ப ஆராதனைக்கான மணி அடிக்கப்பட்டு அனைவரும் அந்நேரத்தில் வேறு வேலைகள் செய்வதை விட்டு விட்டு ஆராதனையில் ஈடுபடுவார்கள். இது நல்லகாரியமாக இருந்தபோதும் இந்நாட்டு மக்களில் அனேகர் பழக்கத்தின் காரணமாக இதில் ஈடுபடுகிறார்கள். இந்நாட்டின் மக்களனைவரையும் மெய்க்கிறிஸ்தவர்கள் என்று கூறிவிடமுடியாது. இருந்தபோதும் தேவனை ஆராதிக்கும் இந்நல்ல பழக்கம் நாட்டின் ஒழுக்க நிலையில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், குடும்ப ஆராதனை இல்லாத வீடுகளால் யாருக்கு என்ன பயன் ஏற்பட முடியும்? குடும்பத்தில் ஆராதனை முறயாகக் கடைப்பிடிக்கப்பட்டால் சபையில் நல்ல மனிதர்கள் தோன்றுவதற்கு வழியுண்டு. அதனால் சபையின் ஆவிக்குரிய நிலை வளரும். சபைகள் உயிருள்ளவையாக இருக்குமானால் அச்சபை மக்களால் நாட்டுக்கும் பெரு நன்மையுண்டு. எரேமியா 10:25 பின்வருமாறு கூறுகின்றது: "உம்மை அறியாத ஜாதிகளின் மேலும், உமது நாமத்தைத்தொழுதுகொள்ளாத வம்சங்களின் மேலும் உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும். ஏன்? அவர்கள் யாக்கோபை பட்சித்து, அவனை விழுங்கி அவனை நிர்மூலமாக்கி அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்கள்." குடும்பங்களைக்கொண்டே நாடுகள் உருவா கின்றன. நாடுகள் தண்டிக்கப்படும்போது அதற்குக் குடும்பங்களே காரணமாக அமைகின்றன. ஏனெனில், குடும்பங்கள் தேவனை ஆராதிக்கத் தவறிவிட்டன. அந்நிலை நாட்டிற்கு நல்லதல்ல என்று வேதம் போதிக்கின்றது.

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி 41**: உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவிடம் இருந்து எத்தகைய பலன்களை விசுவாசிகள் அடைகிறார்கள்?*

***பதில்**: உயிர்த்தெழுதலின்போது விசுவாசிகள் மகிமையில் எழுப்பப்பட்டு, நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப்படையாக வரவேற்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள். அத்தோடு, நித்தியத்திற்கும் கர்த்தரை முழுமையாக அனுபவிக்கும்படியாக பூரணமான ஆசீர்வாதத்தையும் அடைவார்கள்.*

*பிலி. 3:21; 1 கொரி. 15:42-43; மத்தேயு 25:23; 10:32; 1 யோவான் 3:2; 1 கொரி. 13:12; 1 தெசலோ. 4: 17-18.*

**விளக்கக்குறிப்பு:** உயிர்த்தெழுதலாகிய வேத போதனை கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று. ஆனால், அவிசுவாசிகளும் கூட இப்போதனையை எதிர்த்து வந்துள்ளார்கள். பவுலின் பிரசங்கத்தை ஆரம்பத்தில் எதிர்க்காது கேட்டுக்கொண்டிருந்த அத்தேனியர்கள், பவுல் உயிர்த்தெழுதலைக்குறித்துப்பேச ஆரம்பித்தபோது அவரை இகழ்ந்துபேச ஆரம்பித்தார்கள் (அப். 26:8). தேவன் மனிதருடைய சரீரங்களை உயிர்த்தெழச் செய்வார் என்று அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை, அத்தோடு கிறிஸ்தவ விசுவாசமே பொருளற்றதாகிவிடும் என்று பவுல் பேசினார் (1 கொரி. 15:13).

ஆனால், உயிர்த்தெழுதல் என்றால் என்ன? மரித்துப்போய், புதைக்கப்பட்டு அழிவடையும் சரீரங்கள் ஒருநாள் இவ்வுலகில் மறுபடியும் உயிர்த்தெழுந்து நிற்கும் என்பதையே இது விளக்குகிறது. உயிர்த்தெழுதல் என்ற வார்த்தைக்கு எழுந்து நிற்பது என்பது மூல விளக்கம். இவ்வுயிர்த் தெழுதலாகிய போதனை நவீன காலத்திற்கு ஏற்புடையது அல்ல என்று சிலவேளைகளில் பேசப்படுகின்றது. இன்று நிகழந்துள்ள சில காரியங்கள் இத்தகைய போதனையை நம்ப முடியாததொன்றாக மாற்றியுள்ளது என்றும் சிலர் சொல்கிறார்கள். அவ்வாறு நிகழ்ந்துள்ள காரியங்கள் என்ன? மனித சரீரங்கள் குண்டு வீச்சினால் உருத்தெரியாமல் அழிந்து போயிருக் கின்றன. மனித சரீரம் அழியும்போது அது சிதைந்து, இறுதியில் இன்னுமொரு உயிருக்கு உரமாகப்போய்விடுகிறது என்று நவீன விஞ்ஞானம் போதிக்கின்றது. அதுமட்டுமல்லாமல், அவ்வாறு மனித சரீரத்தை உரமாகப்பெற்ற ஒரு செடி வளர்ந்து ஒரு விலங்கிற்கு உணவாகவும், பின்பு அவ்விலங்கைக்கொன்று மனிதன் அதனை உணவாகவும் கொள்கிறான். இத்தகைய செயல் உலகில் மாறி மாறி நிகழ்கின்றது. எனவே, அறிவியலும், நவீன விஞ்ஞானமும் போதிப்ப வற்றைப்பார்க்கும் போது இத்தகைய உயிர்த் தெழுதல்பற்றிய போதனை ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகவே தென்படுகின்றது.

அவிசுவாசிகளின் இத்தகைய வாதங்களை வேதம் அறியாமலில்லை. எபிரேயர் 11:34 நமது முன்னோர்கள் அக்கினியின் உக்கிரத்தை உணர்ந்திருந்ததாகப் போதிக்கின்றது. மனிதன் மனிதனைக்கொன்று உணவாகக்கொண்ட அநாகரிகமான செயலையும்பற்றி உபாகமத்தில் (உபா.28:53) வாசிக்கிறோம். இத்தகைய செயல் களால் மனிதசரீரத்திற்கு நிகழும் முடிவுகளை வேதத்தை எழுதியவர்கள் அறிந்திருந்தபோதும் உயிர்த்தெழுதலை அவர்கள் விசுவாசித்தார்கள். இதற்கு ஒரு நல்ல காரணமிருந்தது. அதுஎன்ன வென்றால் இவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழு தலை நேரில் பார்த்திருந்தார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் அறையப்பட்ட ஆணிகளினால் ஏற்பட்ட அடையாளங்களை அவர்கள் பார்த்திருந்தார்கள். ஆகவே, கிறிஸ்து உயிர்த் தெழுந்திருப்பதால், நிச்சயமாக தேவன் கூறியபடி மரித்தோர் உயிர்தெழுவார்கள் என்பதை அவர்கள் நம்பினார்கள். அதை அவர்களால் புரிந்து கொள்ளவும், விளக்கவும் முடியாமல் போனாலும் உறுதியாக நம்பினார்கள். இதைப்பற்றிப்பேசும் பவுல், தன்னால் இதனை விளக்க முடியும் என்று வாதிடாமல், உயிர்த்தெழுதல் நிச்சமாக நிகழும் என்று மட்டுமே போதித்துள்ளார். இவ்வாறு பவுல் போதித்ததற்கு தேவனை அவர் முழுமுற்றாக நம்பியதே காரணம். மனிதர்களால் இயலாததை தேவன் செய்ய வல்லவராக இருக்கிறார் என்று இவர்கள் நம்பினார்ககள் (மத்தேயு 19:26).

இருந்தபோதும், 1 கொரிந்தியர் 15 இல் பவுல் இதுபற்றி விளக்குகிறார். அங்கே 37 ஆம் வசனத் தில் புதைக்கப்பட்ட ஒருசரீரத்தை பவுல் ஒரு விதையோடு ஒப்பிடுகிறார். நிலத்தில் புதைக் கப்பட்ட விதையானது உயிரற்றுப்போகிறது. இருந்தபோதும் அது இன்னுமொரு உயிரைத் தோற்றுவிக்கிறது. அதன் மூலம் ஒரு புதிய செடி பிறக்கிறது. நிலத்தில் புதைக்கப்பட்ட அவ்விதையா

னது அதையொத்த ஓரினத்தைத்தவிர வேறெதை யும் தோற்றுவிப்பதில்லை. இதேபோல், மனிதன் இறந்து புதைக்கப்பட்டபின், அவனுடைய சரீரத்துடன் தொடர்புடைய அனைத்துப் பாவங் களும் முற்றாக அழிகின்றன. இருந்தபோதும் புதைக்கப்பட்ட அதே சரீரத்திலிருந்து உயிர்த்தெழு தல் நாளில் ஒருசரீரம் உயிர்த்தெழும். இன்னு மொரு உதாரணத்தை எடுத்துக்கொண்டால், ஒரு பழைய மோட்டார் வண்டியை எடுத்து நெருப்பில் இட்டு உருக்கும்போது அது வெறும் உலோகமாக மாறிவிடுகின்றது. அதேவேளை, அவ்வுலோகத்தைப் பயன்படுத்தி நாம் மறுபடியும் ஒரு மோட்டார் வண்டியை செய்ய முடியும். அவ்வாறு செய்யப் படும் மோட்டார் வண்டியும், பழைய வண்டியும் தரத்தில் வேறுபட்டபோதும் தன்மையில் ஒன்றே. இதுபோலவே உயிர்த்தெழுதலின்போது மரித்தோரின் சரீரமும் உயிர்த்தெழும். ஆகவே, உயிர்த்தெழுதலைப்பற்றிய இரு முக்கியமான உண்மைகளை நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். (1) உயிர்த்தெழும் சரீரம் அதன் தன்மையையும், தோற்றத்தையும் பொறுத்த வரையில் பழையதைப்போலவே இருக்கும். (2) ஆனால், அதன் தரம், வல்லமை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அது வேறுபட்டுக்காணப்படும். தேவன் வெறுமையில் இருந்து ஒரு புதிய சரீரத்தைத் தோற்றுவிக்கப் போவதில்லை. வேறு எதிலோ இருந்து நமது சரீரத்தைப்போன்ற தொன்றையும் அவர் உருவாக்கப் போவதில்லை. ஆனால், அவர் நமது பழைய சரீரத்தில் இருந்து மறுரூபமானதொரு சரீரத்தைத் தொற்றுவிப்பார். பழைய சரீரத்தை அவர் எழுப்பும்போது அது எந்தவிதக்கலங்கமும் இல்லாது நித்தியத்தை அடையும்.

உலக முடிவுக்காலம் வரும்போது, கிறிஸ்து இவ்வுலகிற்கு மறுபடியும் வருவார் என்று வேதம் போதிக்கின்றது. அக்காலத்தில் ஒருவர் தவறாமல் எல்லா மனிதர்களும், கல்லறையில் இருந்து எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:28 இல் இருந்து). அந்நாளில் விசுவாசிகளினுடைய சரீரங்கள் சடுதியாக பூரணத்துவத்தைப்பெற்று, அவர்களு டைய சரீரமும், ஆவியும் கிறிஸ்துவுடையதைப் போல மாறும் (1 யோவான் 3:2). அந்நாளில் முழு உலகமும் அக்கினியில் அழிந்து அதிலிருந்து புதிய பரலோகங்களும், புதிய உலகமும் தோன்றும் (2 பேதுரு 3:11 இல் இருந்து). அந்நாளில் மனிதகுல மனைத்தும் நியாயத்தீர்ப்பிற்காக கிறிஸ்துவுக்கு முன் தோன்றித் தங்களுடைய செயல்கள் அனைத்திற்குமாக கணக்குக் கொடுப்பார்கள் (2 கொரி. 5:10). அதேவேளை அந்நாளில் நாம் வியப்புறக்கூடிய சில காரியங்களும் நிகழும் என்று வேதம் போதிக்கின்றது. இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டுள்ளோம் என்று எண்ணிக் கொண்டிருந்த சிலர் அந்நாளில் கிறிஸ்துவினால் கைவிடப்படு வார்கள். இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருந்த போதும், அதைக்குறிந்து சந்தேகம் கொண்டிருந்த சிலர் (இவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள்) அந்நாளில் கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் (மத்தேயு 7:21-13).

ஆனால், கிறிஸ்துவுக்குள், நீதிமானாக்கப்பட்டு, மகவேட்பை அடைந்து, பரிசுத்தமாக்குதலைப் பெற்றுக் கொண்டுள்ள அனைவரும் கிறிஸ்து வினால் வரவேற்கப்பட்டு நீதியுள்ளவர்களாக கணிக்கப்படுவார்கள். அதாவது, இவர்கள் தமது நீதியைப் பெற்றுக் கொண்டுள்ளவர்கள் என்றும், தனக்குச் சொந்தமானவர்கள் என்றும் கிறிஸ்துவே அன்றைய தினம் இவர்களைக் குறித்து அறிக்கை யிடுவார். அன்றைய நாளில் ஒவ்வொரு மனிதனும் தனது கிரியைகளின் அடிப்படையில் கிறிஸ்துவால் நியாயந் தீர்க்கப்படுவான் என்பது உண்மை (வெளி. 20:13). அதேநேரம், எந்தவொரு மனிதனும் தனது சுயகிரியைகளின் மூலமோ, தன்னில் காணப்படும் எக்குணாதிசயத்தின் அடிப்படையிலுமோ இரட்சிப்பை அடைய மாட்டான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் மட்டுமே எந்தவொரு மனிதனும் இரட்சிப்பை அடைய முடியும். அதேவேளை, உண்மையான, இரட்சிப்புக்குரிய விசுவாசத்தைக்கொண்டுள்ளவர்கள் நீதியான காரியங்களை தங்கள் வாழ்வில் செய்பவர்களாக இருப்பார்கள். கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக்கோபு 2:26).

அந்நாளில், ஒவ்வொருவரும் வெவ்வேறுவிதமான பலன்களை அடைந்தபோதும், அனைவருமே நித்தியத்துக்கும் தேவனைப்பூரணமாக அனுபவிக்கக் கூடிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். மிகச்சிறிய பலனைப் பெற்றுக் கொண்ட விசுவாசி கூட தனது எண்ணங்களுக்கெல்லாம் மிஞ்சித் தன்னைப்பெரும் செல்வந்தனாகக் கருதித் தன்னைவிட மேலான பலன்களைப்பெற்றுக் கொண்ட மனிதனோடு மகிழ்வடைவான். தேவகுழந்தைகளின் இருதயத்தில் பொறாமை என்பதற்கே இனி இடமிருக்காது. எல்லாவற்றிற்கும் மேலாக இரட்சிப்பைப்பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் தேவனைக்கொண்டிருப்பார்கள். இதுவே மேலான பலனாகும். சங்கீதக்காரன் சொல்வதுபோல், “உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.” (சங். 16:11). பரலோகத்திற்கு ஏற்கனவே போயிருக்கும் சிலரை நாம் பார்க்க முடிவதே பரலோகத்தை ஆனந்தமுள்ள ஒரு இடமாக்குகிறது, என்று சிலவேளைகளில் நாம் பரலோகத்தைக்குறித்த எண்ணத்தைக் கொண்டுள்ளோம். ஆனால், பரலோகத்தைப் பேரின்பமான இடமாக்குவது கர்த்தரின் சமூகமே. தேவனே விசுவாசிகள் அடையும் மிகப்பெரும் பலனாக இருக்கிறார் (ஆதி. 15:1). ஆகவே, அந்நாள் வரும்போது பரலோகத்தின் பரலோகமான தேவனே தாம் நித்தியத்திற்கும் அனுபவிக்கும் பேறு என்பதை விசுவாசிகள் ஒருபோதும் இல்லாதவிதத்தில் உணர்வார்கள். அபோதே மனிதன் தனது இறுதி முடிவை அடைந்து, தேவனை மகிமைப்படுத்தி, அவரை என்றும் அனுபவிப்பான்.



# வில்லியம் கேரி

**வில்லியம் கேரி**

***கர்த்தரிட மிருந்து பெருங் காரியங் களை எதிர் பாருங்கள்; கர்த்தருக் காகப் பெருஞ் சாதனை களைச் செய்யுங் கள்***

## எதிர்பாராத எதிர்ப்பு

செராம்பூர் மிஷனரிகளின் ஊழியம் ஊக்கத்தோடு வளர்ந்து கொண்டிருந்த நாட்களில் எதிர்பாராதவிதத்தில் ஏற்பட்ட பெரும் எதிர்ப்பை அவர்கள் எதிர்கொள்ள நேரிட்டது. நாட்டை ஆண்டுவந்த அன்றைய அரசு மிஷனரி களுக்கு முதலதர எதிரியாக மாறியது. தமிழகத்தின் வேலூரில் உள்ளூர் வாசிகளுக்கும் அரசிற்கும் எதிராக நிகழ்ந்த ஒரு கிளர்ச்சி உள்ளூர்வாசிகளை ஆத்திரமூட்டி அவர்களை மிஷனரிகளுக்கு எதிராகத் திருப்பியது.

புதிதாக இங்கிலாந்தில் இருந்து வந்திருந்த இரு மிஷனரிகள் உடனடியாகத் திரும்பிப்போகவேண்டும் என்று அரசு கட்டளையிட்டது. கேரி தலைமை நீதிபதிமுன் வருமாறு அழைக்கப்பட்டார். உள்ளூர்வாசிகளின் மத்தியில் இனித் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கக்கூடாது, பிரசங்கம் செய்யக் கூடாது என்று கேரிக்குக் கட்டளையிடப்பட்டது. அதை மறுக்காமலும், அதேவேளை ஏற்றுக்கொள்ளாமலும் கேரி திரும்பினார். கேரியின் மனம் தளர்ந்தது. கடந்த பதின்மூன்று வருடங்களாக அவர் மனதிலிருந்த கவலைகள் ஒன்றுசேர்ந்து அவரை வாட்டத்தொடங்கின. அரசுக்கும், மிஷனரிகளுக்கு மிடையில் ஏற்படப்போகும் போருக்கு இதுதான் ஆரம்பமோ என்று அவர் கலங்கினார். இந்நிலைமையில் தனக்கு எத்தனை ஞானமும், தைரியமும் தேவை என்று எண்ணிப்பார்த்தபோது அவர் பயந்தார். இவ்விடயம் மாலை நேரம் அவருடைய சக ஊழியர்களின் காதை எட்டியது. அவர்கள் சக மிஷ னரியான ஹென்றி மார்டினுக்கு இதைத் தெரியப்படுத்தி அனைவரும் தேவனுக்கு முன் ஜெபத்தில் வந்தனர். மார்டின் அவர்கள் அனைவரையும் தைரியப்படுத்தினார்.

ஆனால், அரசு மிகப்பிடிவாதமாக மிஷனரிகள் இனி வெளியிடங்களில் இந்தி யர்கள் முன் பிரசங்கம் செய்யக்கூடாதென்றும், இந்தியர்களை மிஷனரி களாக அனுப்பக்கூடாதென்றும் வற்புறுத்தியது. அரசு அச்சு வேலைகளைத் தொடர்ந்து செய்யவும், மிஷனரிகள் தங்கள் வீடுகளில் கூட்டங்கள் வைக்கவும் அனுமதியளித்திருந்தபோதும் இந்தியர்களுக்கு மத்தியில் நற்செய்தி ஊழியம் நடைபெறுவது முற்றாக தடைசெய்யப்பட்டது. டேனிஸ் அரசின் பாதுகாப்பு இல்லாமலிருந்திருந்தால் அவர்களுடைய ஊழியம் அனைத்தும் அப்போதே முடிவடைந்திருக்கும்.

இது 1806 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அவ்வாண்டில் செப்டெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் கேரிக்கு ஒரு புதிய எண்ணம் தோன்றியது. இந்தியாவில் சுவிஷேச ஊழியத்திற்குத் தடை என்றால் ஏன் பர்மாவிற்குப் போய் ஊழியம் செய்யக்கூடாது என்று அவர் எண்ணினார். பவுலை பித்தினியாவிற்கு அனுப் பியதுபோல் தேவன் தாமே இவ்வாறாக புதிய ஊழியத்தின் ஆரம்பத்திற்கு வழி காட்டுகிறாரோ என்று எண்ணினார். ஆனால், இன்று நம்மத்தியில் நடக்கும் தான்தோன்றி ஊழியங்களைப் போல கேரி இவ்வூழியத்தை நடத்த முயலவில்லை. தமது எண்ணங்களைக்கேரி தனது சக ஊழியர்களுடன் கலந்து பேசி ஒரு வெள்ளிக்கிழமை அனைவரும் ஜெபத்தில் கர்த்தரிடம் வந்தனர். இறுதியில் புதிதாக இங்கிலாந்தில் இருந்து வந்த இரு மிஷனரிகளில் ஒருவ

ரான செட்டரை பர்மாவுக்கு ஊழியத்திற்கு அனுப்ப முடிவெடுத்தனர். செட்டர் பர்மாவுக்குப் போகத்தயார் செய்திருந்த நாளில் அவர்கள் எதிர்பாராதவிதமாக ஒரு பர்மிய மனிதன் மொழிபெயர்ப்பு வேலைகளில் அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தான். கல்கத்தாவில் நற்செய்தி ஊழியத்திற்கு தடை ஏற்பட்டிருந்த நாட்களில் செராம்பூர் மிஷனரிகள் அதிகம் உழைத்து பல மொழிகளில் பாண்டியத்தியம் அடைந் திருந்தனர். உடனடியாக பர்மிய மொழியில் இந்தியில் இருந்த புதிய ஏற்பாட்டு சுவிஷேச நூல்களை மொழி பெயர்க்கும் வேலை ஆரம்பமாயிற்று. 1807 இல் அமரிக்க பல்கலைக் கழகம் ஒன்று கேரிக்கு அவரது பன்மொழிப்பாண்டியத்தியத்திற்காக "டாக்டர்" பட்டம் வழங்கியது.

கல்கத்தாவின் லால் பஜாரில் சுவிஷேச ஊழியம் செய்வதைத் தடை செய்திருந்த அரசாங்கத்தின் திட்டத்தை முறியடிக்க செராம்பூர் மிஷனரிகள் அங்கே ஒரு சபைக் கட்டடத்தைக் கட்ட முடிவு செய்தனர். அரசு இதைத்தடை செய்யப்போவதாகப் பயமுறுத்தியது. ஆனால், நூறு உள்ளூர்வாசிகளின் அனுமதிக் கையொப்பமிட்ட கடிதத்தால் அரசால் இக்கட்டடத்திட்டத்தைத் தடை செய்ய முடியவில்லை. கல்கத்தா வின் அரச ஊழியர்கள் மிஷனரிகளைப்பற்றித் தப்பான எண்ணங்களைக் கொண்டி ருந்த போதும், மும்பாயின் (பம்பாய்) ஆளுநர் கேரியை அங்கு ஒரு சபை ஏற்படுத்தும் படியாக அழைப்பு விடுத்தார்.

ஒருநாள் திடீரென செட்டர் பர்மாவில் இருந்து திரும்பி அந்நாட்டு நிகழ்வு, ஊழியப் பணிக்கான வாய்ப்புகள்பற்றி பலமகிழ்ச்சிதரும் செய்திகளைக்கொண்டுவந்தார். செராம் பூர் மிஷனரிகள் கூடி இதுபற்றி ஆராய்ந்து பர்மாவின் ஊழியப்பணிக்கான பல திட்டங்களை வகுக்கத்தொடங்கினர். செராம்பூர் மிஷன் முழுவதையுமே பர்மாவிற்குக் கொண்டு செல்வதும் இத்திட்டங்களில் ஒன்றாக இருந்தது. ஆனால் செட்டர் சரியான ஒரு துணை ஊழியக்காரரோடு பர்மாவிற்குத் திரும்பிப்போவதற்கு முன் இன்னுமொரு பெரும் ஆபத்து அவர்களை எதிர்நோக்கியது.

அப்போது புதிதாக வந்திருந்த இந்திய கவர்னர் ஜெனரலை சேராம்பூர் மிஷனரிகளு க்கு எதிரான ஐரோப்பியரும், உள்ளூர்வாசிகளும் பயன்படுத்திக்கொள்ள முடிவெடுத் தனர். சேராம்பூர் மிஷனால் பாரசீய மொழியில் வெளியிடப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரம் முஸ்லீம்களை ஆத்திரமூட்டி அரசுக்கு எதிராகத் திருப்பிவிடப் போகிறது என்றும், உள்ளூரில் பெரும் இனக்கலவரத்தைத் தோற்றுவிக்கப்போகிறது என்றும் கவர்னர் ஜெனரலான லோர்ட் மின்டோவிடம் அவர்கள் புகார் செய்தனர். கேரி உடனடியாக வரவழைக்கப்பட்டார். இது பற்றி அதுவரை எதுவும் அறியாதிருந்த கேரி, வார்ட்டிற்கு துணை செய்த முஸ்லீம் ஒருவன் முஸ்லீம்களுக்கு எதிரான ஒரு தவறான வார்த்தையை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியிருந்ததை அறிந்து அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார். அத்துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதை உடனடியாக நிறுத்திவிடுவாதாகக்கூறி, வார்டின் மொழிபெயர்ப்பையும் அனுப்பி வைத்தார். ஆனால், அரசு அதை ஏற்றுக்கொள்ளாமல் மிஷன் வேலைகள் அனைத்தும் செராம்பூரில் இரு ந்து கல்கத்தாவுக்கு உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்றும், அனைத்து நற் செய்திப்பணிகளும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டது. மிஷனரிகளுக் கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இது பேரதிர்ச்சியைத்தந்தது. உள்ளூர்வாசிகள் எதிர்த்தாலும் பொறுத்துக்கொள்ளலாம் ஆனால், தங்களை உற்சாகப்படுத்த வேண்டிய ஆங்கில அரசே இப்படிச்செய்கிறதே என்று மார்ச்மன் வருந்தினார். உருவ வழிபாடு மலிந்திருந்த கல்கத்தாவில் அக்காலங்களில் பிரசங்கம் செய்ய முடியவில்லையே என்று அவர்கள் வாடினர். அநேகர் தாங்கள் நாடுகடத்தப்படுவதை ஆனந்தத்தோடு எதிர் நோக்கி நிற்கின்றனர். எங்களுக்குத் தேவனைத்தவிர வேறு துணையில்லை என்று கேரி தனது நாளேட்டில் எழுதி வைத்தார். கண்ணீரோடு மிஷனரிகள் கர்த்தருக்கு முன்வந்து அதிகாலைவேளைகளில் ஜெபத்தில் மன்றாடினர். நாங்கள் எல்லோராலும் வெறுக்கப் படும் குறுகிய தொகையினரான மந்தைகள் என்று மார்ச்மன் இக்காலங்களில் எழுதி னார். சேராம்பூரில் இருந்து மிஷன் பணிகள் கல்கத்தாவிற்குப் போவதால் வரும் ஆபத் துக்களை அவர்கள் உணர்ந்திருந்தனர். அரசு கட்டுப்பாட்டில் அவர்களால் எதையும் சரியாக அச்சிட்டு வெளியிட முடியாதென்பதை அவர்கள் அறிந்திருந்தனர். யாரோ ஒரு அரச முனசீப்பின் அனுமதி எல்லாவற்றிற்கும் தேவைப்படும் என்றும், அம்முன்சீப் எதையெதையோ காரணம் காட்டி எல்லா வேலைகளையும் தடை செய்வதையே தன் பணியாகக்கொண்டிருப்பான் என்றும் மிஷனரிகள் அறிந்திருந்தனர். கேரியின் பேராசியர் பதவியும் தொடர்ந்து நிலைக்குமோ என்ற கவலையும் அவர்களைச் சேர்ந்து கொண்டது. எப்படிப்பார்த்தாலும் மிஷனுடைய நிலைமை மிக ஆபத்தான ஒரு கட்டத்தை எட்டியிருப்பதை அவர்கள் முற்றாக உணர்ந்து கண்ணீர் வடித்தனர்.

***உள்ளூர் வாசிகள் எதிர்த் தாலும் பொறுத் துக் கொள்ள லாம், ஆனால் தங்களை உற்சாகப் படுத்த வேண்டிய ஆங்கில அரசே இப்படிச் செய்கிறதே என்று மார்ச்மன் வருந்தினார்.***

## 1689 விசுவாச அறிக்கை

# திரித்துவம்

**அதிகாரம் 2 : பாகம் 2**

**விளக்கம்: அலன் டன்** (Alan Dunn)

**தமிழில்: ஆசிரியர்**

விசுவாச அறிக்கை தனது இரண்டாம் அதிகாரத்தில் திரித்துவத்தைப்பற்றி அளிக்கும் போதனைகளைத் தொடர்ந்து பார்ப்போம். இவ்வதிகாரத்திற்கான விளக்கத்தின் முதல் பகுதியைக் கடந்த இதழில் தந்தோம். கடவுளைப்பற்றிப் பல தவறான போதனைகள் உலவி வரும் இக்காலங்களில் அவற்றில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் அதேநேரம் அவரது அறிவிலும், பரிசுத்தத்திலும் வளரவும் கடவுளைப்பற்றிய வேத போதனைகளில் நமக்கு நல்லறிவு இருத்தல் அவசியம்.

**உ. கடவுளின் முடிவற்ற தன்மை**

**விசுவாச அறிக்கை:** *அவர் மாறாதவர்; அளக்க முடியாதவர்; என்றுமுள்ளவர்; புரிந்துகொள்ள முடியாதவர் (மனிதனுடைய சிந்தனைகளுக்கும், அறிவிற்கும் அப்பாற்பட்டவர்); எல்லாம் வல்லவர்; எல்லாவிதத்திலும் முடிவற்றவர்; மிகப் பரிசுத்தர்; மிகுந்த ஞானமுள்ளவர்; பெருஞ் சுதந்திரம் உள்ளவர்; தனிமுதலானவர்;*

இவற்றின் மூலம் மறுபடியும் கடவுளே படைப்பாளி என்ற உண்மை வலியுறுத்தப்படுகிறது. அவர் எல்லையற்றும், முடிவற்றவராகவும் இருப்பதால் அவரால் படைக்கப்பட்டவைகளால் அவரைக் கட்டுப்படுத்த முடியாது. இப்பகுதி விளக்கும் கடவுளைப்பற்றிய இவ்வுண்மைகளை சுருக்கமாகப் பார்ப்போம்.

**1. அவர் மாறாதவர்:** கடவுளின் தெய்வீகத்தன்மை எவ்வித மாற்றமும் அடையாமல் இருக்கும். ஏற்கனவே காணப்படும் தனது தன்மைகளில் அவர் மனிதனைப் போல் மேலும் வளர்ச்சியடைய வேண்டியதில்லை. (மல்கியா 3:6; எபி. 13:8; யாக். 1:17)

**2. அவர் அளக்க முடியாதவர்:** இதன் மூலம் கடவுளை நாம் இடத்தோடு தொடர்புபடுத்திப் பேசுகிறோம். கடவுள் எங்குமிருக்கிறார் என்ற உண்மையையே இது வலியுறுத்துகிறது. அதாவது, அவரை நாம் ஒரிடத்திற்குள் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. படைக்கப்பட்ட உலகத்தை விடக் கடவுள் பெரியவர். படைக்கப்பட்ட எல்லா உலகத்தையும் அவர் நிரப்புகிறார். ஆகவே, அவரை நாம் ஒரிடத்திற்குள் கொண்டுவர முடியாது. இந்து மதம் போதிக்கும் கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற தத்துவத்திற்கும் வேதம் போதிக்கும் இவ்வுண்மைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்து மதம் கடவுள் ஒரு தூணிலும், துரும்பிலும் கூட இருப்பதாகப் போதித்து கடவுளைக் கட்டுப்படுத்துகிறது. தேவனை அறிந்து கொண்டவர்கள் தூணையும், துரும்பையும் வழிபடுவதில்லை. கடவுள் ஆவிரூபமானவர். அவர் தூணிலும் துரும்பிலும் இருப்பதில்லை. கடவுள் இல்லாத இடமில்லை. அவர் எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார். ஆகவே, அவரை ஒருவரும் கட்டுப்படுத்த முடியாது. (1 இராஜா. 8:27; யெரே. 23:23; சங். 139:7-12).

**3. என்றுமுள்ளவர்:** இதன் மூலம் கடவுளை நாம் நேரத்தோடு தொடர்புபடுத்திப் பேசுகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவ்வுலகத்தில் பிறந்து, ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவ்வுலகில் இருந்து மறையப்போகிற நமக்கு இவ்வுண்மையைப் புரிந்து கொள்வது சிறிது கடினமே. நாம் காலத்தால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆனால், காலம் கடவுளைக் கட்டுப்படுத்துவதில்லை. அவருக்கு தோற்றமோ முடிவோ இல்லை. எனது ஐந்து வயது மகனுக்கு நான் இதைப்போதித்தபோது, அதைப்புரிந்து கொள்ள முடியாமல், தனக்கு தலை வலிப்பதாக அவன் கூறினான். கடவுளின் காலத்தால் கட்டுப்படுத்த முடியாத தன்மை நமது எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதாக இருக்கிறது. (சங். 41:13; 90:2; 1 தீமோ. 1:7)

**4. கடவுளைப் புரிந்து கொள்ள முடியாது:** இதைக்குறித்து விளக்கமாக ஏற்கனவே கடந்த இதழில் விளக்கியிருக்கிறோம். கடவுள் நமது சிந்தனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு எல்லை கடந்து இருக்கிறார் என்பதை வலியுறுத்தவே இவ்வுண்மை இங்கு மறுபடியும் விளக்கப்பட்டிருக்கிறது.

**5. எல்லாம் வல்லவர்:** இங்கே கடவுளுடைய எல்லையற்ற தன்மை நாம் பெரும் வல்லமையுள்ளதாக நினைப்பவற்றோடு தொடர்புபடுத்திக்காட்டப்பட்டுள்ளது. ஒரு சூறாவளியையோ, நில நடுக்கத்தையோ, எரிமலை ஊற்றையோ அல்லது அணுகுண்டு வெடிப்பையோ எண்ணிப் பாருங்கள். இவை எல்லாவற்றையும்விட நமது தேவன் பெரும் வல்லமையுள்ளவர் (யோபு 11:7).

**6. எல்லாவிதத்திலும் முடிவற்றவர்:** நாம் எந்தவிதத்திலும் கடவுளைக் கட்டுப்படுத்தி விடக்கூடாதென்பதற்காகவே

விசுவாச அறிக்கை மறுபடியும் இவ்வுண்மையை வலியுறுத்துகிறது. தனது குணாதிசயங்கள் அனைத்திலும் அவர் எல்லையற்றவர். அவர் அளவற்றவர்.

**7. மிகப்பரிசுத்தர்:** இவ்வுண்மையோடும் இனிவரப்போகும் மூன்று உண்மைகளுடனோடும் "மிக", "மிகுந்த", "பெரும்" என்ற அடை மொழிகள் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். கடவுளைவிட மேலானவர் ஒருவரும் இல்லை என்ற உண்மையை எடுத்துக்காட்டுவதற்காகவும், அதேவேளை, அவருடைய அதிஉயர்ந்த தன்மையை வலியுறுத்துவதற்காகவுமே இவ்வடைமொழி சேர்க்கப்பட்டுள்ளது. கடவுள் தனது பரிசுத்தத்திலும், நீதியிலும், குணாதிசயத்திலும் மிகப்பரிசுத்தராக இருக்கிறார். பரலோக வழிபாட்டில் கடவுளுடைய பரிசுத்தம் மீண்டும், மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. கடவுளுடைய குணாதிசயங்களில் பரிசுத்தம் அனைத்தையும் உள்ளடக்கியதொன்றாக உள்ளது (ஆதி. 14:18-22; சங். 57:2; ஏசா. 6:3; வெளி. 4:8).

**8. மிகுந்த ஞானமுள்ளவர்:** கடவுளுடைய ஞானம் படைப்பின் மூலமும், மீட்பின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கடவுள் எவ்வாறு தனது ஞானத்தின் மூலம் அனைத்தையும் படைத்தார் என்பதை நீதிமொழிகள் 8 விளக்குகின்றது. அதி உயர்ந்த நன்மையை அடைவதை இலக்காகக்கொண்டு உண்மையை நடைமுறைக்கேற்பப்பயன்படுத்துவதே ஞானமாகும். படைப்பு தேவனுடைய ஞானத்தை வெளிப்படுத்துகிறது (சங். 19:1, 2). ஆனால், நற்செய்தியிலேயே அவரது ஞானம் அதி உயர்ந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் மனித சிந்தனையில் தோன்றாத இரட்சிப்பு பற்றி நற்செய்தி மூலமே விளக்கப்படுகின்றது. ஞானத்தின் அனைத்து செல்வமும் கிறிஸ்துவிலேயே அடங்கியிருக்கிறது (1 கொரி. 1:20-24; கொலோ. 2:2, 3; ரோமர் 16:27).

**9. பெருஞ்சுதந்திரம் உள்ளவர்:** கடவுளின் இறை ஆண்மையுள்ள சுதந்திரத்தைப்பற்றி இவ்வுண்மை விளக்குகிறது. பரலோகத்திலுள்ள நமது தேவன் தமது விருப்பத்தின்படியே அனைத்தையும் செய்கிறார் (சங். 115:3). எவருடைய தலையீடோ, வற்புறுத்தலோ இன்றி தனது முழுச்சுதந்திரத்துடனும் கடவுள் செயல்படுகின்றார். தனது மகாகருணையின் மூலம் தனது மக்களை இரட்சிப்பதே அவரது சுதந்திரத்தின் உள்ளார்ந்த நோக்கமாக உள்ளது. பவுல் எபேசியர் முதலாம் அதிகாரத்தில், கடவுள் கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு கருணை காட்டுவதற்கு, அவரது மகா கருணை மட்டுமே காரணமாக உள்ளது என்று விளக்குகிறார் (எபே. 1:5, 6). எவருக்கும் கருணை காட்டுவதற்கு அவருக்கு முழு சுதந்திரமும் உண்டு.

**10. தனிமுதலானவர்:** இதனை இன்னுமொருவிதமாகக் கூறினால் வரம்பற்றவர் (Absolute) என்றும் கூறலாம். இவ்வார்த்தை வேதத்தில் காணப்படாவிட்டாலும், கடவுளின் மெய்த் தன்மையை விளக்குவதற்காக விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் இதனைப் பயன்படுத்தியுள்ளார்கள். அது மட்டுமல்லாமல் உலகத்தார் மேலான ஒன்றின் வரம்பற்ற தன்மையைப் பற்றிப் பேசுவதற்காக இவ்வார்த்தையைப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால், விசுவாச அறிக்கை, கடவுள் உலகத்து மக்களின் எண்ணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அவர் தனிமுதலானவர் (வரம்பற்றவர்) மட்டுமல்ல தனிமுதலான தனைத்திற்கும் மேலானவர். மனித சிந்தனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தனிமுதலானவர்.

**ஊ. கடவுளின் இறை ஆண்மை** (Sovereignty)

*"எல்லாக் காரியங்களையும் தனது மாறாத பெருநீதியுள்ள சித்தத்தின் திட்டப்படி, தன் சுயமகிமைக்காகவே செய்பவர்;"*

கடவுளின் இறை ஆண்மை என்ற பதம், கடவுள் கொண்டுள்ள சகல அதிகாரத்தையும் விளக்குகிறது. எந்த மனிதப்பிறவிக்கும் பதிலளிக்கத்தேவையற்று, தன்னால் படைக்கப்பட்ட எதற்கும் கட்டுப்பட வேண்டிய அவசியமற்று சர்வ அதிகாரத்தையும் கடவுள் தன்னில் கொண்டுள்ளார். பவுல் ரோமர் 9:20ல், அப்படியானால் மனிதனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? என்று கேட்கிறார். பாவத்தின் காரணமாக மனிதனில் காணப்படும் ஆணவமே இக்காலத்தில் அவனைக் கடவுளின் இறை ஆண்மைக்கு எதிராகப் பேசத்தூண்டுகிறது. பாவத்தினால் கறைபடிந்துள்ள நமது சிந்தனையை வீணடித்து தேவன் பாரபட்சமாக நடந்து கொள்வதாக மனிதன் நினைக்கிறான். கடவுளைப்பற்றி அறிந்துகொள்ள முற்படும்போது நாம் தாழ்மையுடன் அவரது வார்த்தைக்கு நம்மை அடிமைப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, நமது சிந்தனைக்கு எட்டவில்லை என்ற எண்ணத்தால் வேதம் போதிக்கும் இறை ஆண்மைபற்றிய போதனைகளை எதிர்க்க முனையக்கூடாது (யாக்கோபு 4:5-8).

பாவத்தின் காரணமாக மனிதனில் காணப்படும் ஆணவமே இக்காலத்தில் அவனைக் கடவுளின் இறை ஆண்மைக்கு எதிராகப் பேசத்தூண்டுகிறது.

முதல் பாராவில் கடவுளின் இறை ஆண்மைபற்றி போதிக்கும் விசுவாச அறிக்கையின் வார்த்தைகள் மூன்று உண்மைகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

**1. அவர் எல்லாக் காரியங்களையும் செய்கிறவர்:** இவ்வார்த்தைகள் கடவுளின் இறை ஆண்மை எத்தகையது என்பதைத் தெரிவிக்கின்றது. அதாவது எல்லாவற்றின் மீதும் அவரது அதிகாரம் செலுத்தப்படுகின்றது. பறவைகளில் இருந்து உலக நாடுகளின் படைகள்வரை அவருடைய அதிகாரம் செலுத்தப்படாத உயிரினங்களோ, பொருட்களோ இல்லை. கடலலைகளின் அசைவையும் அவரே கட்டுப்படுத்துகிறார். கடல் மண்ணின் அமைப்பையும் அவரே நிர்ணயிக்கிறார்.

நன்மை, தீமை, இன்பம், துன்பம் அனைத்தையும் கொண்டு நடத்தி தனது மகிமையின் நோக்கங்களுக்காக அவர் பயன்படுத்திக் கொள்கிறார். (ஏசா. 46:10, 11; மத். 10:29, 30; புலம். 3:37:38; 3:39, 40).

**2. தனது மாறாத பெருநீதியுள்ள சித்தத்தின் திட்டப்படி:** இவ்வார்த்தைகள் கடவுளின் இறை ஆண்மை அவரது ஆலோசனையின்படியே நடப்பதாக நமக்குப் போதிக்கின்றன. விசுவாச அறிக்கையின் மூன்றாவது அதிகாரம் இதுபற்றி நமக்கு மேலும் விளக்குகின்றது. இப்பகுதியில் கடவுள் தனது திட்டங்களை எத்தகைய உறுதியோடும், தீர்மானத்தோடும் செயல்படுத்துகிறார் என்பதை விசுவாச அறிக்கை வலியுறுத்துகிறது. அவரது திட்டங்கள் ஒரு போதும் மாற்றமடையாது. கடவுள் தனது மனதை மாற்றிக்கொண்டதாக சிலவேளைகளில் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ஆனால், இது கடவுள் மனிதன் தன்னைப்புரிந்து கொள்வதற்காக அவனுடைய மொழியில் சொல்லும் உண்மைகளே. உண்மையில் அவர் தனது திட்டங்களை ஒருபோதும் மாற்றிக் கொள்வதில்லை. மனிதன் மனம் மாறுகிறபோது கடவுள் அவனைத் தண்டிப்பதில்லை. இதை வேதம் அவர் தனது மனதை மாற்றிக் கொள்வதாகத் தெரிவிக்கிறது. இவ்வாறாக மனிதன் தேவனின் குரலைக் கேட்டுப் பயந்து மனம் மாறுவதும் கூட அவரது திட்டங்களுக்குள் உள்ளடங்கியிருப்பதாக வேதம் போதிக்கிறது. இதையே விசுவாச அறிக்கை அவரது மாறாத பெருநீதியுள்ள சித்தத்தின் ஆலோசனை என்று தெரிவிக்கிறது (சங். 33:11; நீதி. 19:21).

> கடவுள் தனது மனதை மாற்றிக்கொண்டதாக சிலவேளைகளில் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். உண்மையில் அவர் தனது திட்டங்களை ஒரு போதும் மாற்றிக் கொள்வதில்லை.

**3. அவர் தனது மகிமைக்காகவே அனைத்தையும் செய்கிறார்:** கடவுளின் செயல்கள் அனைத்தும் இறுதியில் அவரது சொந்த மகிமைக்காகவே செய்யப்படுகின்றன, நமது மகிமைக்காக அல்ல என்ற போதனை நிச்சயம் நமக்கு அதிக ஊக்கத்தை அளிக்கின்ற உண்மையாகும் (சங். 115:1). இங்கே மகிமை என்ற வார்த்தை கடவுளின் மதிப்பையும், பிரபல்யத்தையும் பற்றிப் பேசுகின்றது. அவரது மகிமையை அவரது செயல்களிலும், முக்கியமாக அவரது அதிமுக்கிய செயலான மனிதர்களை பாவத்திலிருந்து மீட்கும் செயலிலும் காண்கிறோம். பவுல் ரோமர் 8:18 ல் நம்மில் வெளிப்படுத்தப்படவிருக்கின்ற மகிமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகில் நாம் படும் துன்பங்கள் அனைத்தும் எந்தவிதத்திலும் பொரிதானவையல்ல என்று கூறுவதைப்பார்க்கிறோம். விசுவாச அறிக்கையின் இப்பகுதி எபேசியர் 1:8-12 வரையிலான வசனங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கின்றபோது இதை எழுதிய நமது முன்னோர் கடவுளின் இரட்சிக்கும் கிருபையின் மகிமையையே கருத்தில் கொண்டு இதை எழுதியிருப்பதை உணர முடிகின்றது.

**எ. கடவுளின் அன்பு**

*“அவர் பேரன்பும், பேரருளும், பெருங்கருணையும், சகிப்புத்தன்மையும், அளவற்ற நற்குணமும், உண்மையும் உள்ளவர். அநீதியையும், ஒழுங்கு மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்.”*

விசுவாச அறிக்கையின் கடவுளின் அன்பைக் குறித்துப் பேசும் இவ்வார்த்தைகள் வேதத்தில் இருந்து எடுக்கப்பட்டவை. மோசே கடவுள் தனது மகிமையைக்காட்ட வேண்டும் என்று அவரிடத்தில் வேண்டிக் கொண்டபோது, இஸ்ரவேலர்கள் தங்க ஆட்டினைச்செய்து நடத்திய வழிபாட்டிற்குப் பிறகும் அவர்களைத் தான் தொடர்ந்து வழிகாட்டுவதாக மோசேக்கு உறுதியளித்த தேவன் தனது நன்குணங்களை அவருக்கு காட்டத் தீர்மானித்தார் (யாத்தி. 33:18, 19). அடுத்த நாளில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நாம் தொடர்ந்து வாசிக்கும்போது கடவுள் மோசேக்கு தனது மகிமையை வெளிப்படுத்தியதைப் பார்க்கிறோம். அவ்வேளையிலேயே மேலே நாம் விசுவாச அறிக்கையில் கவனித்த வார்த்தைகளை கர்த்தர் மோசே கேட்கும்படிப் பேசியதை யாத்தி. 34:6, 7 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.

விசுவாச அறிக்கை கடவுள் பேரன்பு நிறைந்தவர் என்று குறிப்பிடும்போது, அவரது அன்பைவிட மேலான அன்பு இருக்க முடியாது என்ற உண்மையை சுட்டிக் காட்டுகிறது. கடவுளின் அன்பைக்குறித்த வேத போதனைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் இன்று அநேகர் தவிக்கிறார்கள். அவருடைய தன்மையிலும், செயல்களிலும் அன்பைத்தவிர வேறு எதையும் நாம் பார்ப்பதில்லை. இஸ்ரவேலர் மீது தனது கோபத்தை அவர் காட்டி, அவர்களைத் தண்டிக்கப்போவதாக அவர் பயமுறுத்தும் போதும் அவரது நீதியுள்ள அன்பைத்தான் நாம் பார்க்கிறோம். தேவனுடைய அன்பைக்குறித்து ஓசியா 11 இல் வாசியுங்கள். ஆகேவே, கடவுளின் அன்பை நாம் மனிதனின் பாவத்தால் கறைபடிந்த அறைகுறை அன்பைப்போல் எண்ணிவிடக்கூடாது. திரித்துவ அங்கத்தவர்கள் மூவரும் ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் அவ்வன்பை நமக்கு வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவை அறிந்து இரட்சிப்பைப்பெற்றுக் கொண்டவர்களால் மட்டுமே கடவுளின் அன்பை அறிந்து அனுபவிக்க முடியும் (யோவான் 1:18; 14:20, 21; ரோமர் 8:39; 1 யோவான் 4:10).

விசுவாச அறிக்கை, மேலும் கடவுள் பேரருளும் (எண். 6:25; சங். 27:7), பெருங் கருணையும் (லூக்கா 18:13; 6:36; சங். 86:15), சகிப்புத் தன்மையும் (2 பேதுரு 3:9), அளவற்ற நற்குணமும், உண்மையும் உள்ளவர் என்று கூறுகிறது. இவையெல்லாவற்றையும் நாம் கடவுளில் பார்க்கிறோம். அவர் மனிதனோடு தொடர்பு கொண்டு செய்துள்ள அனைத்துக் காரியங்களின் மூலமும் இக்குணாதிசயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை நாம் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாசிக்கிறோம்.

விசுவாச அறிக்கை தொடர்ந்து அவர் *ஒழுங்கு மீறுதலை*

*யும் பாவத்தையும் மன்னிக்கிறவர்* என்று கூறுகிறது. அவரது மன்னிக்கும் தன்மை அவரில் இருந்தே உருவாகிறதே தவிர மனிதனில் இருந்தல்ல. அவர் மன்னிப்பதில் அதிக ஆனந்தமடைகிறார். மன்னிப்பது அவரது குணாதிசயங்களில் ஒன்று (சங். 130:3, 4; மீகா 7:18, 19). பாவத்தைக்குறித்துப் பேசும் வேதம் அதன் தன்மையை விளக்க மூன்று வார்த்தைகளைப் பயன் படுத்துகிறது. அநீதி, ஒழுங்கு மீறுதல், பாவம் (யாத்தி. 34:7). பாவிகளாகிய மனிதர்கள் எந்தளவுக்கு கடவுளை விட்டு விலகிப்போய் பாவிகளாய் இருக்கிறார்கள் என்பதை இப்பதங்கள் விளக்குகின்றன. ஒழுங்கு மீறுதல் பாவத்தின் மோசமான தன்மையை சுட்டிக் காட்டுகின் றது. கடவுளின் நியாயப்பிரமாணத்தை மனிதர்கள் மீறும் போது அவர்கள் ஒழுங்குமீறி நடக்கிறார்கள் என்று வேதம் கூறுகிறது. அநீதி என்ற வார்த்தை இருதயத்தின் கேடான தன்மையை விளக்குகிறது. நேரானதாக இல்லாமல், வளைந்து நெறி தவறி கேடுள்ளதாக இருப்பதை விளக்க இவ்வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. பாவம் என்ற வார்த்தை நாம் செய்யும் பாவங்களைப்பற்றி மட்டும் பேசாமல் நமது மெய்த்தன்மையை சுட்டிக் காட்டுகின்றது. நாம் பாவிகளாய் இருப்பதால் பாவத்தை செய்கிறோம். பாவம் என்ற வார்த்தைக்கு இலக்கை விட்டு விலகிப்போகுதல் என்று பொருள். நாம் இலக்குத் தவறி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலானதும், அதி உயர்ந்ததும், மனிதர்கள் பாராட்டக்கூடியதுமான நமது செய்கைகள்கூட கடவுளுக்கு முன்னால் பாவத்தில் கறைபடிந்தே காணப்படுகின்றன. இலக்குத்தவறி, நெறி தவறி வாழும் மனிதனால் கடவுள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான காரியங்களைச் சுயமாகச் செய்ய முடியாது.

> மேலானதும், அதி உயர்வானதும், மனிதர்கள் பாராட்டக் கூடியதுமான நமது செய்கைகள்கூட கடவுளுக்கு முன்னால் பாவத்தில் கறைபடிந்தே காணப்படுகின்றன.

**எ. கடவுளின் நீதி**

*“ஊக்கத்தோடு தம்மை நாடுகிறவர்களுக்கு பலனளிக்கி றவர்; அதேநேரம், அவர் குற்றப்பழிகளையும், குற்றவாளிகளையும் எவ்விதத்திலும் விட்டுவைக்காது, எல்லாப் பாவங்களையும் வெறுத்தொதுக்கி, பெருநீதி யோடும், பயங்கரத்தோடும் நியாயந்தீர்ப்பவர்.”*

இன்று கடவுளின் நீதியை அலட்சியப்படுத்தும் வழக்கத்தை அநேகரிடத்தில் பார்க்க முடிகின்றது. இதுவரை நாம் பார்த்த கடவுளின் அன்பைப்பற்றிய வேத போதனைகளை சரிவர புரிந்து கொள்ள முடியாதவர்கள் அவரது நீதியைப்பற்றிய போதனைகளைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். இதனால் கடவுளுடைய நீதிக்கு வேதத்திற்குப் புறம்பான மறுவிளக்கமும் கொடுக்க முற்படுகிறார்கள். திருமறைத்தீபம் ஒரு இறையியல் களஞ்சியமாக இருப்பதால் கடவுளைப்பற்றிய இறையியலுக்கு மறுவிளக்கம் கொடுக்க முற்படுபவர் களைப்பற்றியும் அவர்கள் தரமுயலும் விளக்கங்கள் பற்றியும் அது பேசி வெளிப்படுத்த வேண்டியது அவசியம். விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் இத்தகைய போலிப்போதனைகளை நாம் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் அதனை எழுதி வைத்தனர்.

தேவ நீதியைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் இன்று தேவ கோபம் மனிதன் மேல் இல்லை என்று போதிக் கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அன்புள்ள கடவுள் மனிதன் மேல் கோபம் கொள்ளக்கூடாது. இவ் வாறாக தேவநீதிக்கெதிராகப் பேசி, கடவுளுடைய கோபத்தை நிராகரிப்பது பாவத்தைப்பற்றிய வேத போதனையையும் நிராகரிப்பதற்கு ஒப்பானதாகும். பாவத்தை நிராகரித்தால் பாவிகள் போக வேண்டிய இட மான நரகத்தையும் நிராகரிக்கும் நிலைக்கு அது நம்மைத் தள்ளிவிடும். வேத போதனைகளில் ஒன்றை நாம் நிராகரித்தால் எல்லாவற்றையுமே நிராகரித்துவிடும் நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து விடும்.

விசுவாச அறிக்கை தேவ நீதியைப்பற்றிப் பேசும்போது, நமக்கு ஊக்கந்தரும்வகையிலேயே அதனை விளக்கு கிறது. கடவுள் ஊக்கத்தோடு தம்மை நாடுகிறவர் களுக்கு பலனளிப்பதாக அது அறிவிக்கிறது. இவ்வார்த்தைகள் எபிரேயர் 11:6 இல் இருந்து எடுக்கப்பட்டவைகளாகும். தம்மை நாடி வருபவர்களை கடவுள் எப்போதுமே அசட்டை செய்வ தில்லை. மனிதர் தம்மை நாடி வரும்படி அவரே அறைகூவலிடு கிறார். அதுவும் அவரை நாம் ஊக்கத்தோடு நாடி வரவேண்டு மென்று வேதம் தெரிவிக்கிறது. இன்று அவ்வாறு ஊக்கத்தோடும், முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் அவரை நாடி வருபவர்கள் அரிது. இலகுவாக, சுலபமாக, எந்தவித ஆர்வமும் இல்லாமல் அவரிடம் எல்லோரும் ஓடிவந்துவிடமுடியும் என்றவிதத்தில் பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்களும், மனிதர் கடவுளை ஊக்கத்தோடு நாடி வர வேண்டிய அவசியத்தைப்பற்றித் தெளிவாக விளக் குவதில்லை (ஏசா. 65:1; எண். 4:29; நீதி. 8:17).

அடுத்ததாக, விசுவாச அறிக்கை கடவுள் பெருநீதி யுள்ளவர் என்று அறிவிக்கின்றது. கருணையுள்ளவ ராகவும், அன்புடையவராகவும், சகிப்புத்தன்மை கொண்டவராகவும், உண்மையுள்ளவராகவும் இருக்கும் கடவுள் நீதியுள்ளவராகவும் இருக்கிறார். அதுவும் பெருநீதியுள்ளவராக இருக்கிறார். இதன் மூலம் அவரது தீர்மானங்களையும், தீர்ப்புகளையும் மறுத்துக் குறை கூறக்கூடிய ஒருவரும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும். அவருக்கு மேலாக இருந்து அவரை நியாயந் தீர்க்கக் கூடிய ஒருவர் எங்கும் இல்லை. தாவீது தனது பாவத்திற்காக தேவனுடைய தயவை நாடிய போதும், தேவன் அவனை நியாயந்தீர்ப்பதைத் தவிர வேறு எதையும் செய்யத் தேவையற்ற நிலையிலேயே இருந்தார் (சங். 51:4). நான் குற்றவாளியாகக் காணப்பட்டாலும் தேவன் நீதியுள்ளவர் என்றே தாவீது கூறினான்.

விசுவாச அறிக்கை தேவன் நீதியுள்ளவர் என்று மட்டும் கூறாமல் அவர் பயங்கரத்தோடு நியாயந்தீர்ப்பவர் என்றும்

கூறுகிறது. அவரது நியாயத்தீர்ப்பை பயங்கரம் என்று விசுவாச அறிக்கை வர்ணிக்கிறது. இவ்வார்த்தை வரம்பற்ற பயத்தையும், பயங்கரத்தையும் சுட்டிக் காட்டு கிறது. அவ்விதத்திலேயே தேவனுடைய நியாயத்தீர்ப்பு அமையும். அவருடைய நியாயத்தீர்ப்பை சந்திக்க நேரிட்ட மக்கள் அடைந்த பயத்தையும், பயங்கரத் தண்டனையை யும் பற்றி பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கிறோம். கடைசிக்காலத்தில் நடக்கப்போகும் நியாயத்தீர்ப்பு பயங்கரமானதாகவே அமையும் என்பதை வேதம் நமக்கு சுட்டிக்காட்டத்தவறவில்லை.

அதுமட்டுமல்லாமல், விசுவாச அறிக்கை கடவுள் பாவத்தை வெறுத்தொதுக்குகிறார் என்று போதிக் கின்றது. பரிசுத்தமாக இருக்கும் தேவனால் பாவத்தை வெறுத்தொதுக்குவதைத்தவிர வேறு எதையும் செய்ய முடியாது. கடவுளின் இத்தகைய வெறுப்பு மனிதனின் சிலை வணக்கத்துக்கெதிராக இருப்பதாக வேதம் போதிக்கின்றது. மனிதர் தன்னைத்தவிர வேறு எதையும் ஆராதிப்பதைத் தேவன் அடியோடு வெறுக்கிறார் (உபா. 12:31; 16:22). தேவன் மனிதன் மனிதனுக்கு இழைக்கும் கொடுமைகளையும், பெண்களுடன் தவறான உறவில் ஈடுபடுவதையும் வெறுத்தொதுக்குகிறார். தனது பரிசுத்தத்திற்கு எதிரான எதையும் அவரால் வெறுத்தொதுக்காமல் இருக்க முடியாது (நீதி. 6:16-19).

அத்தோடு, குற்றப்பழிகளையும், குற்றவாளிகளையும் அவர் எவ்விதத்திலும் விட்டுவைப்பதில்லை என்று விசுவாச அறிக்கை தெரிவிக்கிறது. இவ்வுலகத்து நியாயம் எப்போதுமே கறைபடிந்து காணப்படுகின்றது. ஆனால் நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தரின் தீர்ப்பு பூரண நியாயத்துடன் கொடுக்கப்படும். குற்றவாளிகள் எந்தவிதத்திலும் அவரிடம் இருந்து தப்பமுடியாத அதேவேளை, நல்லவர்கள் அவரது கருணையையும், அன்பையும் அனுபவிப்பார்கள்.

நம்மால் இவ்வாறெல்லாம் சொல்லமுடிவதற்கு கர்த்தரின் கிருபையுள்ள நற்செய்தியே காரணமாக உள்ளது. நாம் அடைய வேண்டிய நீதியான தண்டனையை கிறிஸ்து தன்மேல் சுமந்து பிதாவின் நீதியைச் சந்தித்திருப்ப தாலேயே நாம் நியாயத்தீர்ப்பு நாளின் பயங்கரத்தைப் பற்றிய பயமில்லாமல் இருக்க முடிகின்றது (2 கொரி. 5:21). பாவிகள் நிச்சயமாக தண்டிக்கப்பட வேண்டிய வர்கள். ஆனால், பாவிகளின் தண்டனையை கிறிஸ்து தன்மேல் சுமந்தார். இறுதியில் மரித்து உயிர்த்தெழுந் தார். கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் அவரது மரணத்தின் பலன்களையும், உயிர்த்தெழுதலின் பலன்களையும் அனுபவிக்க முடியும்.

பாவத்திற்கு எதிரான தேவ கோபத்தைச் சந்திக்கும் இரண்டு இடங்கள் உள்ளன. ஒன்று கல்வாரிச் சிலுவை, மற்றது நரகம். இவ்விரண்டு இடங்களில் ஒன்றிற்கு நாம் போக வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசம் நம்மை நரகத்தின் துன்பத்தில் இருந்து விடுவிக்கின்றது. இந்நாளே கிருபையின் நாள். தேவ கருணையும், அன்பும் இந்நாட்களில் நற்செய்தியின் மூலமாக எந்தவித பாகுபாடுமில்லாமல் அனைவரும் அறியுமுகமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

“எல்லாப் பாவங்களுமே கொடூரமானவை யாகவும் மோசமானவை யாகவும் உள்ளன. பாவத்தின் கொடூரத்தன்மை அது எவருடைய மகிமைக்கெதிராக செய்யப்பட்டதோ அதைப் பொறுத்தே அமைந்திருக்கிறது. கடவுள் அளவற்ற பரிசுத்தமுள்ளவராக இருப்பதால் பாவமும் அளவற்ற மகா கேடுள்ளதாக இருக்கின்றது.”

**- ஜொனத்தன் எட்வர்ட்ஸ் -**

# பிரசங்கத்தில் சில தவறுகள்!

பிரசங்கிகள் பிரசங்கத்தில், முக்கியமாக சுவிஷேசப் பிரசங்கத்தில் இன்று, "இயேசு உன்னை நேசிக்கிறார்" என்றும், "தேவன் உங்களில் அன்பு செலுத்துகிறார்" என்றும் தேவனை அறியாத மக்களைப் பார்த்து கூறுவது வழக்கமாக இருக்கிறது. ஒருமுறை நான் தமிழகத்தில் ஊட்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு மரம் தவறாமல் போகிற வழியெல்லாம், "இயேசு உன்னை நேசிக்கிறார்" என்று எழுதப்பட்டிருந்தது. இது கேட்பதற்கு நன்றாகவும், மனதிற்கு தெம்பளிப்ப தாகவும் இருந்தபோதும் இதில் ஏதாவது உண்மை யிருக்கிறதா என்று ஆராய வேண்டியது அவசியம். தேவனுடைய வார்த்தையை நாம் தவறாகப் பிரசங்கித்து விடுவதைப்போன்ற ஆபத்தான காரியம் வேறில்லை.

தேவனுடைய அன்பைப்பற்றிப் பேசுகிற ஒரு முக்கிய பகுதி யோவான் **3:16** ஆகும். இப்பகுதி யில் தேவன் "இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதை வைத்து அநேகர், தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதர் மீதும் அன்பு செலுத்து கிறார் என்று பிரசங்கிக்கிறார் கள். ஆனால், இப்பகுதி தேவன் உலகத்து மக்கள் ஒவ்வொருவர் மீதும் அன்புகூருவதாகப் போதிக்கவில்லை. இங்கே, "உலகத்தில்" என்று மட்டும்தான் எழுதப்பட்டுள்ளது. இதற்குப்பொருள் என்ன? இதற்கு விளக்கம் கொடுக்கும் பிரின்ஸ்டன் இறையியல் வல்லுனர் பீ. பீ வார்பீல்ட் பின்வருமாறு கூறுகிறார்: "இப்பகுதி தேவனுடைய அன்பின் ஆழத்தையும், ஆற்றலையும் பற்றி மட்டுமே பேசுகிறதேதவிர, அவ்வன்பு எத்தனைபேர் மேல் செலுத்தப்படுகிறதென்பதைப்பற்றியல்ல" என்று விளக்குகிறார். "அதாவது மிகப் பெரிய உலகத்தை நேசிக்க தேவன் அளப்பரிய அன்பு கொண்டிருந்தார் என்று இப்பகுதி போதிக்கவில்லை. பாவத்தினால் கறை படிந்த இந்த உலகத்தை நேசித்து தனது குமாரனை அனுப்பிய தேவனின் அன்பு எத்தனை பெரிய அன்பு என்பதையே இப்பகுதி விளக்குகிறது" என்று அவர் கூறினார். ஆகவே, இப்பகுதியை வாசிக்கும்போது தேவனின் அன்பு, எத்தனை பெரிய அன்பு என்று அறிந்து அவரை நாம் துதிக்க வேண்டுமே தவிர, அவர் உலகத்து மக்கள் அனைவரையும் ஒரேவகையில் நேசிக்கிறார் என்று இதைவைத்துத் தீர்மானித்துப் பிரசங்கிப்பதும், போதிப்பதும் அறிவீனம்.

**கிறிஸ்து உனக்காக மரித்தார், என்றும் தேவன் உன்னை நேசிக்கிறார் என்றும் எல்லோரையும் பார்த்துப் பிரசங்கிப்பது தவறு.**

தேவன் உலகத்தின் மீது கொண்டுள்ள அன்பைக் குறித்துப்பேசுகிற வேதபகுதிகள் மத்தேயு *5:43-45*; லூக்கா *6:36* ஆகியவையாகும். இப்பகுதிகள் தேவன், தனது நண்பர்களை மட்டுமல்லாது தனது எதிரிகளையும் நேசிக்கிறார் என்று போதிக்கின்றன. தீயவர்கள் மேலும், நல்லவர்கள் மேலும் அவர் சூரியனை உதிக்கச் செய்கிறார். மழை கிறிஸ்தவர்கள் இருக்கும் பகுதிகளில் மட்டும் பெய்யாமல் எல்லா இடங்களிலும் பெய்கிறது. ஆகவே இக் காரியங்களில் தேவன் பாரபட்சம் காட்டுவதில்லை. அவர் எல்லா மனிதர்கள் மேலும் இரக்கம் காட்டுகிறார். இல்லாவிட்டால் பாவத்தில் ஊறித்திளைத்துக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தை அவர் எப்போதோ அழித்திருப்பார். இவ்விதமாகவே அவர் எல்லா மனிதரையும் நேசிக்கிறார். உலகத்தின் மீதுள்ள அவரது அன்பை நாம் இவ்விதமாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும். இதைத் தேவனின் "பொதுவான கிருபை" (Common Grace) என்று அழைப்பர். இந்தக் கிருபையும் அன்பும் அனைவருக்கும் சொந்தமானது. ஆனால், தேவன் தான் தெரிந்துகொண்ட மக்களில் காட்டும் விசேட அன்பு இதைவிட வித்தியாச மானது. அவ்வன்பை "இரட்சிக்கும் அன்பு" என்றும், "தெரிந்து கொள்ளும் அன்பு" (Saving love or Electing love) என்றும் அழைப்பர். பழைய ஏற்பாட்டில் தேவன் இத்தகைய அன்பை இஸ்ரவேலர் மீது காட்டினார் என்று வேதம் போதிக்கிறது *(உபா. 7:6-8)*.

வேதம் "முன்னறிவு" (Forknow) "அறிவு" (Know) என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகின்றது. இதனை ரோமர் *8:29* இல் பார்க்கலாம். இவ்வார்த்தை, தன்னுடைய மக்களில் தேவன் கொண்டுள்ள விசேடமான அன்பைக் குறித்துப் பேசும் வார்த்தையாகும். இவ்வன்பு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே உரித்தானது. இத்தகைய அன்பையே சங். *1:6*; ஓசியா *11:1*; மல்கியா *1:2-3*; யோவான் *10:27*; ரோமர் *9:11-13* ஆகிய பகுதிகளில் வாசிக்கிறோம். ஆகவே, தேவன் உலகத்து மக்கள் அனைவரையும் ஒரேவிதமாக நேசிப்பதில்லை.

கிறிஸ்து உனக்காக மரித்தார் என்று நாம் ஒரு பாவியாகிய மனிதனைப்பார்த்துக் கூறமுடியுமா? இதையும் இன்று அநேக பிரசங்கிகள் செய்து

வருகின்றனர். கிறிஸ்து எல்லோருக்குமாக, ஒரே விதத்தில், அவர்கள் அனைவரையும் இரட்சிப்ப தற்காக மரித்திருந்தால் இப்படிக் கூறுவதில் எந்தத் தவறுமில்லை. ஆனால், வேதம் கிறிஸ்து தனது மக்களுக்காக மட்டும், அவர்களை இரட்சிக்கும் நோக்குடனேயே மரித்தார் என்று போதிக்கின்றது. என்னுடைய ஆடுகள் எனது சத்தத்தைக்கேட்கும் என்று இயேசு கூறுகிறார். (யோவான் 10:27). கிறிஸ்து தன்னுடைய ஆடுகளுக்காக (தனது மக்க ளுக்காக) சிலுவையில் மரித்தார். "நான் என்னுடையவைகளை அறிந்து என்னுடையவைகளால் அறியப்பட்டுமி ருகிறேன்" (யோவான் 10:15) (அந்த) ஆடுகளுக்காகவே அவர் தன்னுடைய ஜீவனையும் கொடுத்தார். இந்த ஆடுகளையே நான் அறிந்திருக்கிறேன் என்று அவர் 10:27 இல் கூறுகிறார். இங்கே "அறிந்திருக்கிறேன்" என்ற வார்த்தை கிறிஸ்து தனது மக்கள் மேல் கொண்டுள்ள விசேடமான அன்பைக் குறித்துப் பேசுகிறது. இவ்வளவு தூரத்திற்கு வேதம் தேவன் தனது மக்கள்மேல் செலுத்தும் விசேட அன்பைக் குறித்துப் பேசுகிறபோது, அந்த அன்பு எல்லோருக் கும் சொந்தமானது என்று பிரசங்கிப்பது போலித் தனமான போதனையாகும். எல்லோரையும் கிறிஸ்து விடம் வரும்படியாக அழைப்பதும், மனந்திரும்பும் படியாகவும், கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாகவும் வலியுறுத்திப் போதிப்பது மட்டுமே நமது கடமை. கிறிஸ்து உனக்காக மரித்தார் என்றும், உன்னை நேசிக்கிறார் என்றும் பாவிகளைப்பார்த்து வேதத்தில் இல்லாத, பொய்களை நாம் சொல்லக்கூடாது.

ஜோண் மரே, இதைக்குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார். "கிறிஸ்துவின் மீட்பின் மூலம் தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவர்கள் அநேக பயன்களை அடைகிறார்கள். தேவன் தனது மீட்பின் காரியங்களை இவ்வுலகத்தில் நிறைவேற்றி வருவதால் பாரபட்சமில்லாமல் எல்லா மனிதர் மேலும் அநேக ஆசீர்வாதங்களைப் பொழிந்து வருகிறார். சுவிஷேசப் பிரசங்கம், போதனைகளின் மூலமாக பல நன்மை களைப் பலரும் பெற்று வருகின்றனர். கலாத்தியர் 6:10 இல், எல்லா மனிதர்களுக்கும் நன்மை செய்யும் படியாக கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், மீட்பின் பலனால் மட்டுமே ஒருவன் கிறிஸ்தவனாக முடியும். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் பெறப்பட்ட மீட்பின் காரணமாகவே இன்று சுவிஷேசம் பாரபட்சமின்றி அனைவர் மத்தியிலும் பிரசங்கிக்கப்படுகின்றது. அனைவரும் பயனடையும் இத்தகைய அளவற்ற கிருபைமழையை நாம் கிருபை இல்லை என்று சொல்லிவிடமுடியுமா? அதுமட்டுமன்றி, இந்த உலகம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளனைத்தும் கிறிஸ்துவின் மத்தியஸ்தப் பணியின் காரணமாகவே பெறப்படுகின்றது. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டு அவர் அனைத்திற்கும் தலைவராக இருக்கிறார். ஆகவே, அவரது ஆளுகையின் மகிமையால் இவ்வுலகம் அனுபவிக்கும் அனைத்து நன்மைகளும் அவரது சிலுவை மரணத்தோடு தொடர்புடையதாக இருக் கிறது. ஆகவே, கிறிஸ்துவின் மரணத்தின் காரணமாக இந்நன்மைகள் உலகத்திற்குக் கிடைக்க வேண்டு மென்பதே தேவனின் திட்டமாக இருந்திருக்கிறது. ஆனால், உலகத்தில் அனைவரும் அனுபவிக்கும் இத்தகைய நன்மைகளால் உலக மக்களுக்கு இரட் சிப்பை அளிக்க முடியாதிருப்பதாலும், இவற்றை அனுபவிப்பவர்களில் பலர் இரட்சிப்பை ஒரு போதுமே அடையாமல் இருப்பதாலும், கிறிஸ்துவின் மரணத்தின் பலனை பலரும் அனுபவித்தபோதும், அம்மரணம் வரையறுக்கப்பட்டதாக இருப்பதே தேவனின் திட்டமாக இருந்துள்ளது என்றே கூற வேண்டும். அதாவது, கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்படும் பலவிதமான நன்மைகளை தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவர்களும் அனுபவிப்பதே தேவனின் நோக்கமாக இருந்துள்ளபோதும், கிறிஸ்துவின் மரணமளிக்கும் இரட்சிப்பு மட்டும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கே உரித்தாக உள்ளது."

ஆகவே, கிறிஸ்து உன்னை நேசிக்கிறார் என்று கூறு வது எவ்வளவு தவறோ, அதேபோல் கிறிஸ்து உனக் காக மரித்தார் என்று தேவனை அறியாதவர்களைப் பார்த்துக் கூறுவது தவறு. எனவே, எல்லோரும் அனுபவிக்கக்கூடிய கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பொதுவான பலன்களையும், குறிப்பிட்டவர்களுக்கே சொந்தமான கிறிஸ்துவின் மீட்பளிக்கும் இரட்சிப் பையும் பற்றி நாம் குழப்பமில்லாமல் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, நற்செய்தியை அளிக்கும்போது அதனை வேதபூர்வமாக விளக்குவது அவசியம். எல்லா மனிதர்களையும் கிறிஸ்துவிடம் வருமாறு நாம் கட்டளையிட்டு அழைக்கலாம் (லூக்கா 14:23). தேவன் இரட்சிப்பை இலவசமாக அளிக்கிறார்; வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறலாம் (ஏசாயா 55:1; வெளி. 22:17). ஒவ்வொரு தனிமனிதனும் கிறிஸ்துவிடம் வர வேண்டும் என்று பிரசங்கத்தில் உளப்பூர்வமாகவும், ஆணித்தரமாகவும் வற்புறுத்தி அழைக்கலாம். கிறிஸ்து இரட்சிப்பை உனக்கு இலவசமாகத் தருகிறார், அவரை விசுவாசித்து அதைப்பெற்றுக்கொள் என்று அறை கூவலிடலாம். கிறிஸ்துவை விசுவாசித்தாயானால் அவரது அன்பை நீ அனுபவிக்கலாம் என்று உறுதியோடு கூறலாம். ஆனால், கிறிஸ்து உன்னை நேசிக்கிறார், உன்னில் அன்பு செலுத்துகிறார் என்று வேதம் போதிக்காத வார்த்தைகளை நாம் பாவி களாகிய மனிதர்களைப் பார்த்துக்கூறுவது வேதம் போதிக்காத ஒரு போதனை.

**தேவனுடைய புன்னகையை நான் மாபெரும் பரிசாகக் கருதுகிறேன்; ஆனால், அவரது முகச்சுளிப்போ எனக்குப் பெரும் பயத்தை ஏற்படுத்துகிறது.**

**- ஒரு பியூரிட்டன் -**

5

# 1 கொரி 12-14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

ஆவிக்குரியவரங்களைப்பற்றி 1 கொரி. 12-14 வரையுள்ள வேதப்பகுதிகளில் வேதம் போதிக்கும் சத்தியங்களை ஆராயத் தொடங்கிய நாம் முதலில் இப்பகுதி எத்தகைய ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் வேதத்தில் அமைந்து காணப்படுகின்றது என்பதை ஆராய்ந்தோம். அத்தகைய ஆய்வின் முடிவின்படி இப்பகுதிகளைப் படிக்கும்போது நாம் 1 கொரி. 11 வது அதிகாரத்தின் போதனைகளை மனதில் வைத்தே இப்பகுதிகளின் போதனைகளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற உண்மையை அறிந்து கொண்டோம். ஏனெனில், 1 கொரி. 11:17 வது வசனத்தில் இருந்தே ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய போதனைகள் ஆரம்பமாகிறது என்பதை அவ்வதிகாரம் நமக்குத் தெளிவுபடுத்தியது. அதுமட்டுமல்லாமல், சபைக்கு வெளியிலும், சபையிலும் இவ்வரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்துகொள்ள 11வது அதிகாரம் நமக்குப் பேருதவி புரிகின்றது.

அதன்பின் நாம் பண்ணிரண்டாவது அதிகாரத்தின் போதனைகளைப் பார்க்க ஆரம்பித்து கீழ்வரும் உண்மைகளை இதுவரை அறிந்து கொண்டோம்.

**1. தேவனே வரங்களைக்கொடுப்பவர் (12:4-6)**
**2. வரங்கள் அனைவரது நன்மைக்காவும் கொடுக்கப்படுகின்றன (12:7)**
**3. வரங்களை ஆவியானவர் தனது சித்தத்தின் படி பகிர்ந்து கொடுக்கிறார் (12:11)**

இவ்வதிகாரத்தின் இறுதிப்பகுதியான 12:12-31 வரையிலான வசனங்களை நாம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலிரண்டும் சபைபற்றிய உண்மைகளைப்போதிக்க மூன்றாம் பகுதி அப்போதனைகளை ஆவியின் வரங்களோடு தொடர்புபடுத்தி விளக்குகிறது.

**1. 12-13 - கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஒன்றே.**
**2. 14-27 - சபை தனது ஐக்கியத்தின் மத்தியில் பல வேறுபாடுகளையும் கொண்டமைந்துள்ளது.**
**3. 28-31 - இப்போதனைகளுக்கும் ஆவியின் வரங்களுக்குமிடையில் உள்ள தொடர்பு.**

பவுல் திடீரென இப்பகுதியில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைப்பற்றிய விளக்கத்தைக் கொடுக்க முனைந்ததற்குக் காரணமென்ன? ஆவிக்குரிய வரங்கள் பற்றி பவுல் கொடுக்கும் போதனைகளுக்கும் இதற்கும் பெரும் தொடர்பிருப்பதாலேயே சபையைப்பற்றி இப்பகுதியில் விளக்கமாகப்போதிக்கிறார். ஆவிக்குரிய வரங்களில் அதிக கவனம் செலுத்தத்தொடங்கிய கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் சபையின் நன்மைக்காகவே அவை கொடுக்கப்படுகின்றன என்ற பேருண்மையையும், சபையின் மெய்த்தன்மையையும் அடியோடு மறந்துவிட்டு சபையின் அழிவிற்குக் காரணமாகும் நிலைக்குத் தங்களைக் கொண்டுவந்திருப்பதால் பவுல் சபையைப்பற்றி இங்கே அவர்களுக்கு நினைவுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

### 1. கிறிஸ்துவின் சரீரம் ஒன்றே (12-13).

“சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கின்றது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். . . எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.” என்று 12, 13 ஆம் வசனங்களில் பவுல் கூறுகிறார். இங்கே, மனித சரீரத்தைக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குப் பவுல் ஒப்பிட்டுப்பேசுகிறார்.

இங்கே சரீரம் என்று கூறப்படுவது கிறிஸ்துவின் சபை. வேதம் பல இடங்களில் சபையை மனித சரீரத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறது. இதே வேதப் பகுதியில் 27 ஆம் வசனத்தில் நீங்களே கிறிஸ்துவின் சரீரம் என்று கூறுவதன் மூலம் சபையையே பவுல் கருத்தில் கொண்டுள்ளதை அறிந்து கொள்கி

றோம். 28 ஆம் வசனம் இதை மேலும் தெளி வாக்குகிறது. ஏனெனில், சரீரத்தின் வேறுபட்ட அங்கங்களைப்பற்றி இதுவரை பேசிய பவுல், அத்தகைய அங்கங்களாகவே சபையில் தேவன் அப்போஸ்தலர்களையும் ஏனையோரையும் நியமி த்துள்ளார் என்று தான் சபையைக்குறித்தே இதுவரைப் பேசியதை வலியுறுத்துகிறார்.

அதுவும் இப்பகுதியில் பவுல் கொரிந்து சபையை யும், அதைப்போன்ற அனைத்து உள்ளூர் சபை களையுமே கருத்தில் கொண்டுள்ளதையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். மனித சரீரத்தில் அநேக அவயவங்கள் இருப்பதுபோல் சபையும் அநேக கிறிஸ்தவர்களைக் கொண்டுள்ளது. இக் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒரே ஆவியினாலே அவர்களுடைய பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபைக்குள் கொண்டுவரப்பட்டுள் ளார்கள். இக்கிறிஸ்தவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு ஒருவராக, ஒரே சபைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். ஆகவே, பவுல் பல அங்கங் களைக் கொண்டமைந்துள்ள கிறிஸ்துவின் சபை எந்தவிதப் பிரிவினையுமில்லாமல் கிறிஸ்து வுக்குள் ஒன்றாக இருப்பதையும், அச்சபையில் ஆவியால் ஏற்படுத் தப்பட்டுள்ள ஐக்கியத்தையும் இங்கே வலியுறுத்திப் போதிக்கி றார்.

அத்தோடு கிறிஸ்துவின் சபை யின் அங்கத்தவர்களாகிய அனைத்துக் கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டுள்ளதாக பவுல் தெரிவிக்கிறார். எல்லோரும் ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளோம் எனும் வார்த்தைகள் எல்லோரும் ஒரே ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்ற உண்மையைத் தெரிவிக்கின்றது. பவுல் ரோமர் 8:9 இல், “கிறிஸ்து வின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல” என்று கூறுகிறார். ஆகவே, ஆவியைப்பெற்றுக்கொள் ளாத ஒரு கிறிஸ்தவனை வேதத்தில் பார்க்க முடி யாது. தேவனுடைய சபையில் ஆவியுள்ள கிறிஸ்த வர்கள், ஆவியில்லாத கிறிஸ்தவர்கள் என்று இரு பிரிவினரை நாம் பார்க்க முடியாது. இத்தகைய தவறான போதனைகளை உருவாக்கியுள்ளவர்கள் வேதம் புரியாத கெரிஸ்மெட்டிக் இயக்கத்தாரே.

> **தேவனுடைய சபையில் ஆவியுள்ள கிறிஸ்தவர்கள், ஆவியில்லாத கிறிஸ்தவர்கள் என்று இரு பிரிவினரை நாம் பார்க்க முடியாது.**

### 2. சபை தனது ஐக்கியத்தின் மத்தியில் பல வேறுபாடுகளையும் கொண்டுள்ளது (14-27).

இதுவரை சரீரம் ஒன்றாயிருக்கிறது என்று கூறி சபையின் ஐக்கியத்தை வலியுறுத்திய பவுல் 14 ஆம் வசனத்தில், சரீரமும் ஒரே அவயமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது என்று கூறுகின் றார். இதற்குக்காரணம் ஐக்கியத்தைக்கொண்டு காணப்படும் ஒரே சபையில் பல வேறுபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டத்தான். இவ்வுண்மை கொரிந்தியர்களுக்குப் புரியாமல் போய்விட்டது. கொரிந்தியர்கள் தங்களுடைய வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி சபை ஐக்கியத்திற்கு ஊறுவிளைவித் தார்கள். பவுல் சபையில் காணப்படும் வேறுபாடு கள் எந்தவிதத்திலும் அதன் ஐக்கியத்தை அழிக் காது என்று கூறுகிறார். அத்தோடு, அவ்வேறுபாடு கள் ஐக்கியத்தை மேலும் மேன்மைப்படுத்தும் என்கிறார்.

இதை விளக்கும் பவுல் 15-16 வசனங்களில் சபை யில் போட்டி மனப்பான்மைக்கு இடமில்லை என்று போதிக்கிறார். இதுவே, கொரிந்து சபையில் காணப்பட்டது. ஒருவர் மற்றோருவருடைய வரத்தின்மீது ஆசை கொள்வதும், தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரத்தில் திருப்தியில்லாமல் இருப்பதும், பொறாமையையும், போட்டி மனப் பான்மையையும் சபையில் ஏற்படுத்தியது. கால், தான் கையாகமாற வேண்டுமென்று ஆசைப்படுவ தும், காது, தான் கண்ணாக வேண்டும் என்று துடிப்பதுபோலும் கொரிந்து சபைக்கிறிஸ்தவர்கள் நடந்து கொண்டார்கள். பொறாமை யாலும், போட்டியாலும் மற்றவர்களுடைய வரங்களை அலட்சியப்படுத்தியதோடு, தங்களுக்குப் பெருமை தேடி அலைந்தார்கள். அத்தோடு சபையையும் அலட்சியப்படுத்தி னார்கள்.

இதைத்தொடர்ந்து விளக்கும் பவுல், நமது சரீரம் முழுவதும் கண்ணாக இருந்தால் எப்படி இருக்கும் என்று 17 ம் வசனத் தில் கேட்கிறார். அது சரீரமாக இருக்காது என்பதே இதற்குப் பொருள். ஆகவே, தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரத்தைக் கீழானதாக எண்ணி எல்லோ ரும் மற்றொன்றில் ஆசைப்படு வது முழு சரீரமும் கண்ணாக இருக்க ஆசைப் படுவது போலாகும். தன்னிடம் இல்லாத தொன்றிற்காக எரிச்சலடைவது தேவன் நம்மைப் படைத்த விதத்தில் திருப்தி இல்லாமல் இருப்ப தாகும். இது தவறு என உணர்த்தும் பவுல், 18 ம் வசனத்தில் தேவன்தாமே தனது விருப்பத்தின் படியும், தமது சித்தத்தின்படியும் ஒவ்வொரு வருக்கும் எது அவசியமோ அதைக் கொடுக்கிறார் என்று போதிக்கிறார். ஆகவே, பொறாமையும், போட்டி மனப்பான்மையும் சரீரத்தில் இருக்கக் கூடாது என்பது பவுலின் வாதம்.

பொறாமையும், எரிச்சலும், போட்டி மனப் பான்மையும் இருக்கும் இடத்தில் நிச்சயம் ஆணவ மும் குடிபுகும். 21-24 வரையிலான வசனங்கள் இதற்கெதிரான போதனையைத் தருகின்றன. தன்னைப்பற்றிப் பெரிதாக எண்ணி மற்றவர் களைத் தாழ்த்திப்பேசக்கூடாது என்று 21 ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். தான் மட்டுமே பெரியவன், ஏனையோர் தேவையில்லை என்ற

விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது. கண்ணானது, கையைப்பார்த்து நீ எனக்குத் தேவையில்லை என்றும், தலையானது கால்களை நோக்கி நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக் கூடாது என்கிறார் பவுல். இவ்வாறு நடந்து கொள்கிறவர்களின் வாழ்க்கையில் ஆணவமே ஆட்சி புரிகிறது.

அதுமட்டுமல்லாமல், சரீரத்தில் பலவீனமா யிருப்பவைகளை நாம் தாழ்த்திப்பேசவோ, நடத்தவோ கூடாது. பலவீனமான அங்கங்களை சரீரத்தில் படைத்துள்ள தேவன் அவற்றின் அவசியம் கருதியே அவற்றைப் படைத்துள்ளார். அதேவகையில் சபையில் மற்றவர்களை நாம் நடத்த வேண்டும். ஒருவர் தன்னைப்பற்றி வீண்பெருமை பாராட்டுவதும் தவறு, மற்றவர் களை அலட்சியப்படுத்துவதும் தவறு. அதுமட்டு மல்லாமல் சரீரத்தில் பலவீனமான பகுதிகளில் நாம் எப்போதும் அதிக கவனம் செலுத்துவது போல் சபையில் பலவீனமானவர்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதை மேலும் விளக்கும் பவுல் இலட்சணமுள்ள வர்களுக்கு அலங்கரிப்பு தேவையில்லை என்கிறார். சரீரத்தில் பலம் பொருந்திய தலை, கண்கள் போன்ற அங்கங்களும், பலவீனமான அதேவேளை மிகவும் அவசியமான சுண்டுவிரல், கட்டைவிரல், மூக்கு போன்ற பலம் குறைந்த அங்கங்களும் காணப்படு கின்றன. இவை அனைத்துமே சரீரம் முறையாக இயங்குவதற்கு அவசியமானவை. ஒன்றைவிட மற்றொன்று எந்தவிதத்திலும் பெரிதல்ல.

இதுவரை பவுல் மனித சரீரத்தின் அங்கங்களின் தன்மையையும், அவற்றின் அவசியத்தையும் பற்றி உதாரணம்காட்டி விளக்கினார். ஆனால், இதுவரை தான் மனித சரீரத்தைப்பற்றித்தான் விளக்கியதற்கான காரணம் என்ன என்பதை 25ம் வசனத்திலிருந்து பவுல் எடுத்துக்காட்டுகிறார். இங்கே, சபையின் அங்கத்தவர்களைப்பற்றிப் பவுல் பேசுவதைப் பார்க்கலாம். மனித சரீரத்தில் பலமானதும், பலவீனமானதுமான அங்கங்களுக் கிடையில் எந்தவிதமான போட்டியோ, பிரிவினையோ இல்லாததுபோல் சபையிலும் எந்தவிதமான பிரிவினைக்கும் இடமிருக்கக் கூடாது. ஒவ்வொரு அவயவமும் மற்றதைக்குறித்து அக்கறைகொள்ள வேண்டும். ஒரு அங்கத்தவர் துன்பத்திற்குள்ளானால் ஏனைய அங்கத்தவர்கள் அத்துன்பத்தை அனுபவிக்க வேண்டும். ஒரு அங்கத்தவர் ஆனந்தப்பட்டால் ஏனையோரும் அவரோடு இணைந்து ஆனந்தப்பட வேண்டும். இதுவரை இத்தனை உதாரணங்களைக்காட்டி இவற்றையெல்லாம் தான் கூறியதற்கு என்ன காரணம் என்பதை பவுல் 27 ம் வசனத்தில் விளக்குகிறார். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாகவும், தனிப்பட்டவிதத்தில் அச்சரீரமாகிய சபையில் அங்கத்தவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று விளக்குகிறார்.

கொரிந்தியர்களுக்கு இவையெல்லாம் துப்பரவாக நினைவிலில்லை. வரங்களை நாடி அலைந்து, மற்றவர்களின்முன் தங்களை மேன்மைப்படுத்திக் கொள்வதிலேயே நாட்டம் கொண்டிருந்ததால் சபை என்றால் என்ன? என்ற உணர்வில்லாமல் அவர்கள் நடந்து கொண்டார்கள். பிரிவினையும், போட்டிமனப்பான்மையும், ஆணவமும், அகங்கார மும் அச்சபை அங்கத்தவர்களை ஆட்டிப்படைத் தது. இதனால் ஒருவர் மற்றவர் மேல் அன்பு செலுத்தாமல் சுயநலத்தோடு நடந்து கொண்டார் கள். தாங்கள் ஒரே சரீரமாக வாழ அழைக்கப் பட்டவர்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு மறந்துபோய்விட்டது. சபை வளர்ச்சிக்காக தேவன் கொடுத்த வரங்களை அவருடைய நோக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தி அழிவை நாடி நடக்க முற்பட்டார்கள்.

### 3. இப்போதனைகளுக்கும் ஆவியின் வரங் களுக்கு மிடையில் உள்ள தொடர்பு *(28-31)*.

இதுவரை தான் போதித்த அனைத்தையும் இப்போது பவுல் ஆவிக்குரிய வரங்களுடன் தொடர்புபடுத்தி இவ்வசனங்களில் விளக்குகிறார். 28 ஆவது வசனத்தில், தேவனானவர் சபையில் "முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களை யும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளை யும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்."

இவ்வசனங்களைக் கவனமாக வாசிக்கும்போது பவுல் வரங்களை முதலாவதும், இரண்டாவது என்று வரிசைப்படுத்திப் பேசுவதைப் பார்க்கி றோம். அப்போஸ்தலர்களுக்கு சபையில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் கிறிஸ்துவினால் பயிற்சி கொடுக்கப்பட்டு, சபை நிறுவுவதற்காக அனுப்பப்பட்டதுதான். அவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகள். அதேவேளை எல்லோ ரும் சபையில் சமம் என்று கூறி வரங்களுக்கு முக்கியத்துவம் தராமலும் இருக்க பவுல் முயலவில்லை.

அடுத்ததாக, சத்தியத்தைப் போதிப்பதோடு தொடர்புடைய வரங்களுக்கே ஏனைய எல்லா வரங்களையும்விட முக்கிய இடத்தைப் பவுல் அளிப்பதையும் பார்க்கிறோம். சத்தியத்தைக் கேட்பதன் மூலமே கிறிஸ்தவர்கள் தேவனின் சித்தத்தை அறிந்து கொள்வதால் இவ்வரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்நியபாஷை பேசுதல், அற்புதங்கள் செய்தல் போன்ற வரங்களுக்கு பவுல்சபையில் கடைசி இடத்தையே தந்துள்ளதை இப்பகுதி உணர்த்து கிறது. அவற்றிற்கு பவுல் சபையில் முக்கியத்துவம் தரவில்லை. இவை போதனையோடு தோடர் புடைய வரங்களைவிடப் பெரிதானவையல்ல.

அடுத்து பவுல் அடுக்கடுக்காக பல கேள்விகளை எழுப்புகிறார். இக்கேள்விகளுக்கு இலக்கண முறைப்படி இல்லை என்பதே பதில். எல்லோரும் அப்போஸ்தலர்களா? இல்லை. எல்லோரும்

தீர்க்கதரிசிகளா? இல்லை. எல்லோரும் அற்புதங் கள் செய்கிறவர்களா? இல்லை. இதன் மூலம் சபையில் எல்லோருக்கும் ஒரே வரத்தைக் கர்த்தர் கொடுப்பதில்லை என்பதைப் பவுல் உணர்த்து கிறார். சபை அநேக அங்கத்தவர்களைக் கொண்டமைந்திருப்பதோடு அவர்கள்மத்தியில் அநேக வரங்களும் காணப்படுகின்றன என்பது இதற்குப் பொருள்.

இறுதியாக இப்பகுதியை ஒரு நல்ல ஆலோசனை யைத் தந்து பவுல் முடிக்கிறார். முக்கியமானதும், மேலானதுமான வரத்தை நாடுங்கள் என்று பவுல் கூறுகிறார். அதாவது பிரயோஜனமுள்ள, பலருக் கும் நன்மையளிக்கக்கூடிய வரத்தை நாடுங்கள் என்று கூறுகிறார். அத்தோடு நிறுத்திவிடாமல் அவ்வரம் என்ன என்று நான் உங்களுக்கு விளக்கப் போகிறேன் என்றும் கூறி முடிக்கிறார்.

**முடிவாக:**

பவுல் இப்பகுதியின் மூலம் கொரிந்தியர்கள் விட்ட பல தவறுகளைச் சுட்டிக் காட்டு வதன் மூலம் நவீன கெரிஸ் மெட்டிக் இயக்கத்தின் பல தவறுகளையும் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

1. கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் சபையில் போதனைக்கு முக்கிய இடத்தைக் கொடுக்காமல், அனு பவத்தை மட்டும் வலியுறுத்தி கொரிந்தியர்களைப்போல நடந்து வருகிறார்கள். இதனாலேயே இன்று பல போலி அனுபவங்களைப்பற்றி நாம் தொடர்ந்து கேட்டு வருகிறோம். நாய் குறைப்பதுபோல் குறைக்கத் தொடங்குவதும், பயித்தியக்காரர்களைப்போல சிரிப்பதோடும் நிறுத்தாது இன்று தங்களுக்குக் கடவுள் தங்கப் பற்களை அளிக்கிறார் என்ற ஒரு புது அனுபவத்தையும் இவர்கள் ஆரம்பித்திருக் கிறார்கள் (இங்கிலாந்தின் ஒரு பகுதியில் இன்று இது ஆரம்பமாகியிருக்கிறது). வேத அனுமதியில் லாத புதுப்புது அனுபவங்களை நாடுவதனால் ஏற்பட்ட வினையே இது.

2. அந்நிய பாஷை பேசுவது ஆவியின் அபிஷேகத் தைப் பெற்றுக்கொண்டதற்கான அடையாளம் என்ற இவர்களுடைய போதனையும் தவறானது.

இதுவரை நாம் பார்த்து வந்துள்ள வேதப்பகுதியில் இப்போதனைக்கு எந்தவிதத்திலும் இடமில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆவியைப் பெற்றுக் கொள்கிறார்கள். எல்லாக் கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷையை பெற்றுக் கொள்வதில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் ஏதோ ஒரு வரம் கொடுக்கப் பட்டிருப்பதால் சிலருக்கு மட்டும் ஆவியின் அபி ஷேகம் வரத்தைப்பெற்றுக்கொண்டிருப்பதற்கு அடையாளமாக கிடைக்க வேண்டும் என்ற போதனை வேதத்தில் இல்லை. வரங்களை ஆவி யானர் தனது விருப்பப்படி அளிக்கிறாரே தவிர அவற்றை நாம் கேட்டு அவரை வற்புறுத்த முடி யாது. கெரிஸ்மெட்டிக்கூட்டம் போலிப் போதனை களின் மூலம் கிறிஸ்தவர்களை ஏமாற்றி வருகிறது.

**கிறிஸ்தவர்கள் படிக்க வேண்டிய பாடம்**

கொரிந்தியர்கள் வரங்களையும், அற்புதங்களையும் பெரிதுபடுத்தி சுயநலத்தால் சபையின் அமைதி யைக் குலைத்தார்கள். சபை ஒற்றுமையை அழித்தார்கள். கிறிஸ்து சபையில் ஏற்படுத்தி யுள்ள ஒற்றுமையை அழிக்க நமக்கு உரிமை இல்லை. வரங் களின் பயன்பாடு சபையின் ஒற்றுமையைப் பாதிக்கும் என்று பவுல் போதிக்கவில்லை. அவை சபையை வளர்க்கவே கொடுக் கப்பட்டுள்ளன. சபை ஒற்று மையை வரங்கள் பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அதற்கு நாமே காரணம், நமது தவறான எண்ணங்களும், செய்கைகளுமே காரணம். தேவன் இருக்கும் இடத் தில் ஒற்றுமை இருக்கும். கொரிந்து சபைக் கிறிஸ்தவர்களைப்போல நடந்து சுயநலத் தால் இன்று அநேகர் சபைகளின் அழிவிற்கு வித் திட்டு வருகிறார்கள். கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் மத்தியி லேயே இன்று தனிஊழியம் என்ற எயிட்ஸ் வியாதி அதிகமாக இருக்கிறது. ஏனெனில் அவர் களுக்கு சபை வாழ்க்கை பொருந்திவராது. ஒவ் வொருவரும் தங்களுடைய சுயநன்மைக்காக ஒரு வரத்தைப்பயன்படுத்தி பிரபல்யம் அடைய முற்படு வதால் அவர்களால் சேர்ந்து வாழ முடியாது. சேர் ந்து வாழும் சபை வாழ்க்கையில் தனி மனிதனின் வரத்திற்கு முக்கியத்துவம் இருக்காது. அங்கே வேத பூர்வமான ஒற்றுமையின் மத்தியில் வரங்கள் பயன் படுத்தப்படும்.

**கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் மத்தியிலேயே இன்று தனிஊழியம் என்ற எயிட்ஸ் வியாதி அதிகமாக இருக்கிறது.**

**வாசகர்கள் கவனத்திற்கு**

உங்கள் முகவரி மாறும்போது நீங்கள் புதிய முகவரிக்குப்போகுமுன்பே சரியான முகவரியை எமக்கு எழுதி அனுப்பத் தவறாதீர்கள். சரியான முகவரி இல்லாததால் திரும்பிவரும் பத்திரிகைகளால் வீண் செலவு ஏற்படுவதோடு உங்களுக்கும் பத்திரிகை தொடர்ந்துகிடைக்காமல் போகலாம். - ஆசிரியர்

# எண்ணங்கள் !

நீங்கள் அனுப்பி வைத்த நூல்களும், பத்திரிகையும் ஊழியத்திற்குப் பிரயோஜனமாக இருக்கின்றன. உண்மையான கிறிஸ்தவன் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பாதுகாத்து மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்லும் விதத்தில் பத்திரிகையின் தரம் இருக்கிறது. உப்பு தன் சாரத்தை இழந்தால் என்ற நூல் ஆழமான கருத்தை வலியுறுத்தி உள்ளது. இத்தகைய கருத்துக்கள் அடங்கிய நூல்களை இன்னும் அதிகமாக வெளியிட ஜெபிக்கிறேன்.

*பாஸ்டர் ரொபின் பென்கர், தமிழ்நாடு*

நான் இறையியல் கல்லூரியில் படித்து வருகிறேன். திருமறைத்தீபம் பத்திரிகையை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சபையைப்பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் தீபத்தில் வரும் கட்டுரைகள் எனக்கு மிகப் பிரயோஜனமாக இருக்கின்றன. எனக்கும் பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.

*ஏ. யொசுவா, தமிழ்நாடு*

உங்களுடைய சஞ்சிகைகளையும், நூல்களையும் வாசித்துப் பயன்பெற்ற தேவ ஊழியன் நான். இதயத்தைத்தொடும் அநேக கட்டுரைகளையும், கருத்துக்களையும் நானும் என் சபையாரும் வாசித்து உணர்த்தப்பட்டோம், பயன் பெற்றோம். அத்துடன் அவைகளைப் பாவித்தும் வருகிறோம். கிறிஸ்தவ சத்தியங்கள் மலிவாகப்போய்விட்ட இந்நாட்களில், தரமான ஆரோக்கியமான உபதேசங்களை வெளியிட்டு வருவதைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறோம்.

இலங்கையின் மத்திய மலையகப் பகுதியில் எமது சபை உள்ளது. சபை மக்கள் உங்களுடைய ஆக்கங்களைப்பெறவும், வாசிக்கவும் ஆவலாய் உள்ளார்கள். திருமறைத்தீபத்தின் சில பிரதிகளையாவது அனுப்பி உதவுவீர்களானால் எமது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும்.

*கே. எஸ். கிறிஸ்டோபர், ஸ்ரீ லங்கா*

திருமறைத்தீபம் பத்திரிகையைப் படித்தேன். பயனுள்ளதாக இருக்கிறது. சபையில் ஆத்துமாக்களுக்குப் போதிக்க பத்திரிகையின் அநேக செய்திகள் அதிக உதவியாக இருக்கின்றன. கிறிஸ்துவே இப்பத்திரிகையை எனக்கு அனுப்பி வைத்ததுபோல் இருக்கிறது. நேரடியாக எனக்கு ஒரு பிரதியையும் எமது சபை விசுவாசிகள் படித்துப் பயனடைய இருபத்தைந்து பிரதிகளையாவது தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

*வி. கேப்பிரியல், தமிழ்நாடு*

*(முடிந்தவரை கேட்டு எழுதுபவர்களுக்கெல்லாம் பத்திரிகையை நாம் தொடர்ந்து அனுப்பி வருகிறோம். போதகர்கள் நாம் அனுப்பும் பிரதிகளை சபையாருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். எம்மால் முடிந்த அளவுக்கு அதிகமான பிரதிகளை சபைகளுக்கு அனுப்ப முயற்சி செய்கிறோம். உங்கள் ஒவ்வொருவரின் ஆர்வத்திற்கும், அன்பிற்கும் நன்றி. – ஆசிரியர்)*

## உள்ளே . !

1. இல்லற வாழ்வின் இரகசியம்

2. குடும்ப ஆராதனை

3. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

4. வில்லியம் கேரி

5. திரித்துவம்

6. பிரசங்கத்தில் சில தவறுகள் !

8. 1 கொரி. 12-14

9. எண்ணங்கள் !